திராவிடநாடு

10—6—62 வார வெளியீடு

உரிமை

[சுரா]

கடலில் பிறக்கும் முத்து
கண்டணிந்தவர்க்கே மகிழ்வு தரும்!
மலையில் வளரும் சந்தனம்
மார்பில் பூசியவர்க்கே மணர் தரும்!
சோலையில் ஆடிடும் மலர்கள்
தலையில் சூடியவர்க் கழகுதரும்!
யாழில் தவழும் இன்னிசை
கேட்பவர் செவிக்கின்பம் தரும்!
மண்ணில் உறங்கும் தங்கம்
மாலையாய்ப் பூண்டவர்க்குப் பொலிவுதரும்!
பெற்றெடுத்த தாயானாலும் தன்மகளை
உற்றதலைவனுடன் வாழ்வப்பதில் மாண்புண்டு!
பிறக்கும் பொருளெல்லாம் ஓரிடத்தில்
'பிரிந்தே' பெருமைப்படும் வேறிடத்தில்
இந்தியச் சுதந்திரம் பெற்றோமென்பதால்
ஏகச்சிறையில் வருந்திடக் கூடுமோ
தங்கக் கூண்டானாலும் பச்சைப்பசுங்கிளி
தாவிப்பறந்திடும் இச்சை சுதந்திரத்தில்!
எந்தத் தடை எதிர்த்தெழுந்தாலும்
நொந்த திராவிடம் எழுச்சிபெறும்!
உலகம் ஒருகுடையின்கீழ் வாழ்வதில்லை
உரிமை 'ஒருமைத்தளையால்' அழிவதில்லை!

நல்ல வேளை! கொஞ்சம் தாமதித்திருந்தாலும் அந்தப் பஸ்ஸில் எனக்கு இடம் கிடைத்திருக்காது. எப்படியோ கட்டணச் சீட்டைப் பெற்றுக்கொண்டு பஸ்ஸினுள் சென்றமர்ந்தேன். பெருமூச் சொன்று களைப்பின் காரணமாக வந்தது. பஸ்ஸும் புறப்பட்டது.

நான் யார்? இந்த வினா உங்கள் உள்ளத்திலே எழும்புகின்றதை அறிவேன். என் பெயர் பாலன். பாலனென்றதும் வடமொழிப் பெயரென்றெண்ணல் வேண்டா. தூய தமிழ்ப் பெயரே அது. நான் பட்டப் படிப்புப் பயில்வதற்காக எனது சொந்த ஊரையும் சுற்றத்தினரையும் மறந்து அயலிருக்கும் பட்டணமொன்றிற்குச் சென்றிருந்தேன். இருபது வயதான எனக்கு மண முடிக்க என் பெற்றோர்கள் முற்பட்டனர். மனிதன் வாழ்வில் ஏற்படும் சிறப்பான சம்பவமே அதுதானே! நானும் பிணங்காது சம்மதமளித்தேன். பெற்றோர்கள் பெண் பார்க்கலாயினர்.

நான் ஒரு பட்டதாரியாக இருந்தும், காதல் மணம் செய்ய விரும்பவில்லை. காரணம், அது மனிதனை நல்ல நிலையில் வாழ வைத்தாலும் வைக்கலாம், அல்லது பயங்கரமான முடிவையும் காட்டலாமல்லவா! ஆதலால் பெற்றோர் உறுதி செய்யும் பெண்ணையே மணக்க முடிவு கட்டினேன்.

நான் பட்டணத்திலே படித்துக் கொண்டு வந்தேன். என் பெற்றோர் பெண் பார்த்துக்கொண்டிருந்தனர். காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு நாள் என் முகவரிக்கு ஒரு கடிதம் வந்தது. அதை என்றுமே மறக்க இயலாது. மஞ்சள் பூசப்பட்ட காகிதக்கூடு அது. கூட்டை உடைத்து உள்ளே பார்த்தேன். அப்பாதான் எழுதியிருந்தார். நான் அவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவனும்; மீறவேமாட்டேனும். அதனால் அவர் விருப்பப்படியே ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டதாகவும், நான் உடனே புறப்பட்டு வரவேண்டுமெனவும் எழுதியிருந்தார். உண்மைதான். என்றுமே நான் அப்பாவின் சொல்லை மீறியதில்லை. என் உள்ளம் களிப்படைந்தது. மேலும் படித்தேன், மறுமுறையும் படித்தேன். என் உள்ளமெல்லாம் களித்தது. என் வாழ்விலே ஒரே ஒரு திருவிழா. "மணவிழா". எவ்வளவு சுவையானது. எண்ணி எண்ணிப் பூரிப்படைந்தேன். கேட்கவேண்டுமா? உடனடியாகப் பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்தேன். மறுநாட் காலையிலேயே புறப்பட்டேன். உள்ளம் பூரிப்படைந்தவுடன் உடலும் பளபளத்தது. வெண்ணிறச் சட்டையும், வெண்ணிற நீளக் கால் சட்டையும் வெண்ணிறக் காலணிகளும், வெள்ளிச் சங்கிலியுடன் கூடிய காலங்காட்டியும் அணிந்து எனது மஞ்சள் நிறமான விரலொன்றில் மஞ்சள் நிறமான தங்கமோதிர மணிந்து விளங்கினேன். எனது சுருள் மயிர் காற்றிலே அசைந்தது. கண்ணாடியில் என்னுருவைப் பார்த்து நானே திகைத்துவிட்டேன். இதைச் சொல்வது தற்பெருமை யென்று நீங்கள் சொன்னாலும் நான் கவலைப்படப்போவதில்லை. ஏனெனில் நாமனைவருமே அவ்வண்ணம் தானே உள்ளோம்.

சரேலென்று ஒரு குலுக்கலுடன் பஸ் நின்றது. மனவுலகிலே சஞ்சரித்த நான் மண்ணுலக எண்ணத்திற்கு வந்தேன். என் முன்னே பார்த்தேன். ஒரு இளம்பெண் வாந்தி எடுத்துவிட்டாள். அதில் சில துளிகள் என்னுடைய ஆடைகளிலும் பட்டுவிட்டன. பஸ் ஓட்டுபவன் முனகிக்கொண்டு தன் வேலையைத் தொடர்ந்தான். பஸ் போய்க்கொண்டிருந்தது.

நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவள் என்னைப் பார்த்தாள்—கெஞ்சும் தோரணையில் — நான் அவளை நன்றாக உற்றுப் பார்த்தேன். நல்ல அழகு. காணக் கிடைக்காத கட்டழகி. நான் என்னையறியாமல் அவளையே பார்த்தேன். அவள் கெஞ்சும் தோரணையிலிருந்த முகம் சிவந்தது — வெட்கத்தால் அல்ல— கோபத்தால் ஒரு முறை முறைத்து விட்டு முகத்தைக் கடுமையாகத் திருப்பிக்கொண்டாள். நான் என்னை உணர்ந்தேன். தமிழகப் பண்பே பண்பு! எனக்கு என்ன கோணல் புத்தி! வேறு பெண்ணை மணக்கப்போகும் நான் எவ்வளவு பெரிய தவறு செய்துவிட்டேன். நான் கொடுமைக்காரன். என் கண்கள் இற்று விழக்கூடாதா? சே! என்னை நானே நொந்துகொண்டேன். அவள் — உத்தமி — உயர் குடும்பப் பெண்ணாகத்தானிருக்க வேண்டும்.

அவளைச் சுற்றி ஒரு பெண் கும்பலே உட்கார்ந்திருந்தது. எல்லோரும் அவளைப் பார்த்தவண்ணமே சென்றனர். அவள் பலவிதமான அணிகலன்கள் பூண்டிருந்தாள். கீழே சாமான்கள் மூட்டைக் கணக்கில் இருந்தன. பார்த்தால் ஏதோ திருமணக் கும்பல்போல்தான் தோற்றமளித்தது. அவளுக்குத்தான் மணவிழாப் போலும்! அவள் மயக்க மிகுதியால் கம்பியில் தலை வைத்தவாறே கண்களை மூடிக் கொண்டு வந்தாள். பஸ் ஓடியது. ஊர் வந்தடைந்தேன்.

மணவிழாவிற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. நாட்களும் நெருங்கிக்கொண்டிருந்தன. நான் மணக்கப்போகும் பெண் யாரென்று எனக்குத் தெரியாது. காரணம் பெற்றோர்களே பார்த்து முடிவு செய்துவிட்டதால்தான்.

ஒரு நாள் மாலை. ஊரின் வெளிப்புறக் காட்சிகளைத் தனிமையிலே கண்டுகளிக்கப், புகைப்படக் கருவி, கைவிளக்கு இரண்டினையும் எடுத்

(4-ம் பக்கம் பார்க்க)

பண்டிதரின் பயணம் பயன்தருமா?

லர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (10—6—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 41

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த ஈழத்தின் நிலைமையையும், இன்றிருக்கும் நிலைமையும் உற்று நோக்கிப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றோர், உண்மையிலேயே கண் கலங்காமல் இருக்க முடியாது. அந்த அளவுக்கு இன்று மாறுதல்—எதிர் பாராத மாறுதல்—ஏமாற்றந் தரும் மாறுதல் ஏற்பட் டிருக்கிறது.

யார் இலங்கையை வளமாக்கி வனப்புள்ளதாக ஆக்கினரோ, அவர்கள் இன்று வாழ முடியாதவர்களாக ஆக்கப்படும் கொடுமை, நன்றி கொல்லும் கொடு மையைவிடக் கொடூரமானதாகக் கருதுமளவுக்கு இலங்கை அரசு தமிழ் மக்களை, அவர்களால் பொறுக்க முடியாதபடி தொல்லைகள் பல தந்தவண்ணம் உள்ளது.

சிறுபான்மை மக்களுக்குத் தரப்படவேண்டிய நியாயமான உரிமைகள் எதனையும் தர இசையாத இலங்கை அரசின் போக்கைக் காணும் நடுநிலைமை யாளர் எவரும் வருந்தாமல் இருக்க முடியாது.

வாழ வைத்தவர்களை வதைக்கிறார்களே! இது மனிதப் பண்புக்கு அப்பாற்பட்ட ஒரு பெரும் அநீதி யாயிற்றே என்று எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.

இன்று இலங்கைவாழ் தமிழர் அங்கே அதிகாரம் கேட்கவில்லை. ஆளும் உரிமை எங்களுக்கே சொந்த மெனச் சொல்லவில்லை. ஒருகாலும் அப்படிச் சொல்ல மாட்டார்கள். அவர்கள் கேட்பதெல்லாம் இந்த நாட் டைத் தவிர வேறு எந்த நாட்டையும் நாங்களறியோம். நாடற்றவர்கள் என்று எங்களைச் சொல்லாதிர்கள். நாடற்றவர்கள் என்று எங்களை எங்கோ கப்பலேற்றி அனுப்பிவிட எண்ணாதீர்கள். எங்களையும் இங்கே வாழ விடுங்கள் என்பதுதான். நாங்கள் பேசும் மொழி தமிழ். அது எங்கள் சொந்தமொழி. எங்கள் மொழியை எங்களிடமிருந்து பறிக்க எண்ணாதீர்கள் என்பதுதான். நல்லெண்ணம் படைத்த சிங்களத் தலைவராயினும், மற் றோராயினும் இலங்கை வாழ் தமிழர் விடுக்கும் இந்த வேண்டுகோள் நியாயமற்றதெனச் சொல்ல முன்வர முடியாது; முன்வரமாட்டார்கள்.

எனினும் அங்கே கிளர்ச்சிகள் ஓய்ந்தபாடில்லை. அடக்குமுறை அடங்கிய பாட்டைக் காணோம்! கடந்த சில வருடங்களாக அங்கே எழுந்தெழுந்து—ஓயாமல்—நடைபெற்றுவரும் கொந்தளிப்புகளைக் காணும் நல்லுள் ளம் படைத்தோரெல்லாம் வருந்தாமலிருக்க முடியாது.

ஒருபுறம் நாடற்றவர்கள் எனப்படும் தமிழர்களின் பிரச்சினை இப்படித் தலைதூக்கிக் கொண்டு நிற்கிறது. பிறிதொருபுறம் மொழியுரிமை கோரி ஆங்குள்ள தமிழர் கள் கிளர்ச்சிகள் புரிந்தவண்ணம் இருக்கின்றனர். சென்ற ஆண்டு முழுதும் 'சிங்களம்மட்டுமே' என்ற இலங்கை அரசினரின் மொழிக் கொள்கையை எதிர்த்து அறப்போர் புரிந்து சிறைசென்ற ஈழத் தமிழர்கள் திரும்பவும் இவ்வாண்டு — சிறையினின்று அவர்கள் வெளிவந்த பின்னரும்—மொழியுரிமை கோரி அர்த்தால் செய்வதில் ஈடுபட்டேயுள்ளனர்.

இதிலிருந்து பெறப்படும் உண்மையை, அதாவது உரிமை கோரி நிற்கும் மக்களை எத்துணை தடவைதான் சிறையிலிட்டு வாட்டினாலும், பூட்டினாலும், அவர்களின் உரிமைக் கிளர்ச்சியை எந்த ஆற்றலினாலும் அடக்கி விடவோ, அழித்துவிடவோ முடியாது. அதற்கு ஒரே பரிகாரம், உள்ளதை உள்ளபடி ஆய்ந்து உரிமை வேண்டுவோர்க்கு உரிமை அளித்துவிடுவதே என்ற உண்மையை உணர்ந்து ஈழத்தில் அரசுக் கட்டில் ஏறி யிருக்கும் ஆட்சியினர் நல்லதொரு முடிவுக்கு வர வேண்டுமென விழைகிறோம். வளமும், திருவும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள செம்மைத் திருமொழி யாம் தமிழ்மொழியை இரண்டாந்தர மொழியாக எண் ணுவதும், அவ்வழி இயங்குவதும் சால்பல்ல என்று பொது நிலையார் கூறும் ஆய்வுரையையும் இந்த வேளை மனத்திற்கொண்டு இலங்கையரசு நல்லதொரு முடி வினை நல்குதற்கு முன்வருமென எதிர்பார்க்கிறோம்!

இந்தச் சூழ்நிலையில்தான் பண்டித நேரு அவர்கள் அண்மையில் ஈழம் செல்லவிருக்கிறார் என்பதை அறி கிறோம்.

நேரு அவர்கள் உலகின் எந்தப் பாங்கில் அமைதி குலைந்தாலும் அங்கெல்லாம் கச்சை கட்டிக்கொண்டு அமைதிப் புறாவைப் பறக்கவிடுபவர் எனப் பெயர் பெற்றவர். உலகெல்லாம் அமைதிப் பணிக்காக ஓடோடிச் செல்லும் நேரு அவர்கள் அருகிலிருக்கும்

இலங்கையில் உள்ள அமைதியின்மையை 'என்னவோ ஒன்றுமில்லாதது' என்ற போக்கில் மேல் நோக்காகப் பார்ப்பது நமக்கெல்லாம் வேடிக்கையாக அல்ல, விசித்திரமாகத் தென்படுகிறது. விசித்திரம் என்று கூறுவதைவிட வேதனை தரும் ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறதென்று கூறுவதுதான் மிகப் பொருத்தமாகும். இம்முறையேனும் நேரு அவர்கள் தம் இலங்கைப் பயணத்தை அங்நாட்டிற்குப் பயனுள்ள பயணமாக ஆக்கிக் காட்டுவாரென்று நாம் எதிர்பார்க்கிறோம். அங்நாட்டில் மொழிச்சிக்கலும், நாடற்றோர் சிக்கலும் மாய்ந்தொழியுமாறும், அங்கே அன்பும், ஒற்றுமையும், அமைதியும் நிலவிக்குலவுமாறு வழிவகை காண்பதற்கான முயற்சியில் ஈடுபடுவார், அதில் தம் மேலான செல்வாக்கைப் பயன்படுத்துவார், என எதிர்பார்க்கிறோம். சென்ற தடவைகளைப்போல வெறும் மாமழைப் பயணமாக இந்தத் தடவையும் நேரு அவர்களின் இலங்கைப் பயணம் அமையாமல், பயனுள்ள பயணமாக அமையுமென நம்புகிறோம்! ✻

சென்னை மாவட்ட தி. மு. க. 4-வது மாநாடு

நிர்வாகிகள் தேர்வு

3—6—62 இராயபுரம் அறிவகத்தில் நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டத்தில் மாநாட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

வரவேற்புக்குழுத் தலைவர்: நீலநாராயணன்

செயலாளர்கள்: டி. கே. பொன்னுவேலு, பி. ஏ.
W. P. B. சுந்தரம்.

பொருளாளர்: டி. கே. கபாலி, எம். சி.

தொண்டர்படைத் தலைவர்:
ஜி. சுப்பிரமணியன், எம். சி.

ஜூலைத் திங்கள் 13, 14, 15 ஆகிய நாட்களில் கோடம்பாக்கம் அண்ணா நகரில் மாநாடு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2-ம் பக்கத் தொடர்ச்சி

துக்கொண்டு புறப்பட்டேன். பட்டணக் கரையிலே காணமுடியாத இன்பத்தைக் கண்டேன். நல்ல தென்றல் காற்று; இயற்கைக் காட்சிகள்; பறவைகளின் உல்லாச வாழ்க்கை. இவற்றைக் கண்டவாறே ஊருக்கு அப்பால் ஓடிய ஆற்றின் கரைக்குச் சென்றமர்ந்தேன். பக்கத்திலே வளர்ந்து படர்ந்த புளியமரம் ஒன்று இருந்தது. அங்கு பறவைகள் இட்ட கூச்சலை இன்னிசையாகப் பருகிக்கொண்டிருந்தேன். என்னையே மறந்தேன்.

"கடவுளே என்னைக் காப்பாற்று" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். இரவு நேரம் பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. காலங் காட்டியை நோக்கினேன். ரேடியம் பதித்த அக்காலங் காட்டி மணிஏழரைஎன்பதைக் காட்டியது. இந்நேரத்தில் குரல் கேட்கிறதே!பிசாசாக இருக்குமோ? யார் கண்டது? அப்பொழுது அம்மா கண்டித்தார்கள். கேட்காமல் வந்தோமே என வருத்தப்பட்டேன். மறுபடியும் பழைய குரல் கேட்டது. பெண் குரல்! குரல் வந்த திக்கை நோக்கினேன். பயங்கரமான காட்சி என்னைப் புல்லரிக்கவைத்தது! கருமையான இருளிலே அப்புளிய மரக் கிளைகளும் கருமையாகத் தெரிந்தன. அதிலே ஒரு கிளையில் ஒரு கயிறு சுருக்குப்போட்டிருந்த வண்ணம் காற்றினுல் ஆடியது. அதன் பின் ஒரு கரிய உருவம் நின்று கொண்டிருந்தது. அதைக் கண்ட என் உடல் வெடவெடத்தது. என்னையறியாமல் அச்சம் குடி கொண்டது. பயந்தவண்ணம் அசைவற்றிருந்தேன். அதற்குள் அந்த உருவம் அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டியது. ஒரு மணித்துளி தவறினலும் விபரீதம் நடந்துவிடும். என்னையறியாது எனது கை கைவிளக்கைப்போட்டது. என் வாய் 'நிறுத்து' எனக் கத்திற்று. என் கால்கள் அந்த உருவத்தின் முகத்தில் பட்டவுடன் அந்த உருவம் செய்வதறியாது திகைத்து நின்றது. அருகில் சென்றேன். அந்த உருவம்... ஒருஅழகிய இளம் பெண்!

என்னைக் கண்டவுடன் அந்தப் பெண்ணின் முகம் வெளிறியது. பயத்தால் கண்களை மிரள மிரள விழித்தாள். அவள் கன்னங்கள் வீங்கியிருந்ததோடு கண்ணீர்த் துளிகளைத் தாங்கி இருந்தன.

கண்ணீர்த்துளி! கண்ணீர்த்துளிகள் சிந்தப்பட்டால் அந்த நிலைக்குக் காரணம் சிந்தியவர்களல்ல! சிந்தச் செய்தவர்கள்! இன்றைய கட்சிகளிலும் இதே நிலையேயுள்ளன.

நான் உற்றுப் பார்த்தேன். அந்த முகம்—பார்த்த முகமாகத் தென்பட்டது. ஆ! நினைவுக்கு வந்துவிட்டது. சடாரெனக் கழுத்தில் மாட்டிய கயிறை எடுத்தெறிந்துவிட்டு, நீ பஸ்ஸில் வந்த பெண்தானே எனக் கேட்டேன். அவள் முகம் மாறியது. தலை கவிழ்ந்தாள். அவள் நெஞ்சின் குமுறல் நீராகக் கண்களின் மூலம் பாய்ந்தது—பகலவனின் சூடே மழையாகப் பொழிவது போல்! மண் மீது பாயும் மாநதியாவும் பேதைப் பெண்களின் கண்ணீர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பாய்ந்தது. அவள் அமைதியாகத் தரையிலமர்ந்தாள். நானும் அமர்ந்தேன். அவள் எவ்வளவு கொடூரமான செயலில் ஈடுபட்டாள்—என் மனம் பயங்கர நிகழ்ச்சிகளைக் கண்முன் கண்டது. இளம் பெண்! இந்த வயதில் இப்படி ஏன் புறப்படவேண்டும்? பிரயாணத்தின்போது கண்டதுபோல் அவள் உடலில் நகைகளேயில்லை-அழகைத்தவிர. ஆனல் சோகமான முகம் மட்டும் மாறிவிடவில்லை.

நான் மெல்ல வினவினேன். அவள் விடை பகர்ந்தாள். "என் பெயர் புனிதா. நான் உயர்நிலைப் பள்ளிவரை படித்திருக்கிறேன். படிக்கின்ற நாட்களில் எனக்கும் மணியன் என்பவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. அது காதலாக மாறியது. அப்போது அவர் கீழ் சாதியைச் சேர்ந்தவர் என்பதற்கு எவ்விதமான அடையாளமும் அவர் உடலிலே நான் காணவில்லை. நாட்கள் நகர்ந்தன. காதல் செய்தி என் பெற்றோருக்குத் தெரிந்தது. உடனே அவர்கள் என் மணவிழாவிற்கு ஏற்

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

10–6–'62.

தம்பி !

சூடும் சுவையும் நிரம்பிய திராவிடநாடு பிரச்சினை குறித்துக், காங்கிரஸ் வட்டாரத்
திலே கவனிப்பவர்கள், பலவகையினர்; ஒவ்வொரு வகையினர் ஒவ்வொரு முனையி
லிருந்து பிரச்சினையைக் கவனிக்கிறார்கள், என்பதனைச் சென்றகிழமை எடுத்துக்காட்டி
யிருந்தேனே, நினைவிலிருக்கிறதல்லவா? ஒரே அடியாக அவர்கள் அனைவரும் நமது
பிரச்சினைக்கு ஆதரவுதர முன்வரக்காணோமே என்று நான் கவலைப்படவுமில்லை, கலக்க
மடையவுமில்லை. ஆரஅமர யோசிக்காமல், உணர்ச்சியால் மட்டும் உந்தப்பட்டு நம்
முடன் உறவாடிவிட்டு, செச்சே! இப்போதல்லவா புரிகிறது, இது பொரு
ளற்ற பிரச்சினை என்பது என்று கூறி ஓடிவிடுபவர்களைவிடப், பிரச்சினை
புரிகிறவரையில் தயக்கம் காட்டுபவர்கள், தெளிவு ஏற்படுகிறவரையில்
கேள்வி கேட்பவர்கள், விளக்கம் கிடைக்கிறவரையில் இசைவுதர மறுப்ப
வர்கள், ஆயிரம் மடங்கு மேல். குரலை உயர்த்தி உயர்த்திப் பேசினவர்கள்
இன்னும் என்ன இவர்களிடம் பேச்சு! இரண்டில் ஒன்று பார்த்துவிட
வேண்டியதுதான்! — என்று பரணிபாடினவர்கள், கொள்கையிலே
உண்மையான பிடிப்பு இல்லாததால் எத்துணை வேகமாக வெளியேறி
விட்டார்கள் என்பதைத்தான் பார்த்துவிட்டாயே! ஆகவே, தயக்கம் காட்டுபவர்கள்
மேல், தகதகவென ஆடிவிட்டு ஓடிவிடுபவர்களைவிட!! எனவே, காங்கிரஸ் வட்டாரத்
திலே, நமது பிரச்சினைக்கு உடனடி ஆதரவு கிடைக்கவில்லையே என்பது எனக்குக்
கலக்கத்தைத் தரவில்லை.

"நைடதம்" எழுதிய அதிவீரராமபாண்டியனுடைய அண்ணியார், நூலின் தரம்
எப்படி என்று கேட்கப்பட்டபோது சொன்னார்களாம். வேட்டை நாய் வீடு திரும்புவது
போல இருக்கிறது என்று. வேட்டைக்குக் கிளம்பும்போது, வேகம் மிகுதியாக இருக்
கும்; வெற்றி கிட்டினும் கிட்டாமற்போயினும், அலுத்து, களைத்து, சோர்ந்து வீடு திரும்
பும் அல்லவா? அதுபோல, "நைடதம்" னூர் நூல் முற்பகுதி மிக வேகமாக இருக்
கிறது, பிற்பகுதியில் வேகம் இல்லை, மந்தமாக இருக்கிறது, என்பதைக் கூறவே,
வேட்டை நாய் உவமையினைப் புலமைமிக்க அம்மையார் கூறினார்.

விடுதலை இயக்கத்தில் ஈடுபடுவோர்களும், தம்பி! தங்களிடம் உள்ள, திரட்டிக்
காட்டக்கூடிய வேகம் அவ்வளவையும், துவக்கத்திலேயே கொட்டிக் காட்டிவிட்டு,
நின்று நிதானமாக, நீண்ட காலம், நெருக்கடிகளை ஏற்றுத், தொண்டாற்றவேண்டிய
நிலைமை ஏற்படுகிறபோது வேகம் குன்றிப்போய், சோர்வு தட்டிப்போகும் நிலை அடை
வார்களானால், அவர்களால் விடுதலை இயக்கத்துக்குப் பலன் இல்லை. ஆர்வம் வெள்ள

சூடும் சுவையும்

[3]

மெள்ள வளரலாம், தவறில்லை; தயக்கம் இருக்கலாம், தவறில்லை; வேகம் குறைவாக இருக்கலாம், தவறில்லை; ஆனால், தொண்டாற்றும் திறம் நீடித்து இருக்கவேண்டும், வெற்றி ஈட்டிடும் வரையில் தொண்டாற்றவேண்டும்; பொறுப்புணர்ச்சி இருக்கவேண்டும்.

காகிதக் கப்பல், நொடியிலே நாசமாகிவிடுகிறது, கொளுத்தி வைக்கும் 'மத்தாப்பு' பளிச்சிட்டுக் காட்டுகிறது. விடுதலை இயக்கத்தில் தொண்டாற்ற, வேகம் வெடித்துக்கொண்டு வருவது மட்டும் போதாது; காட்டுத்தீ போலன்றி, வீட்டு விளக்கு நிதானமாக, சீராக ஒளிவிட்டு இருளை அகற்றுவதுபோலத், தொண்டு புரிதல்வேண்டும்.

ஓட்டப்பந்தயக்காரர்களிலே சிலர், துவக்கத்திலேயே குடல் தெறிக்க ஓட ஆரம்பித்து, பாதிப் பந்தயத்தின்போது, அலுப்படைந்து, வலிவை இழக்காமல் அதேபோது ஒரே அடியாகப் பின்தங்கிவிடாமல், ஒரு சீராக ஓடிவருபவர், வேகத்தை அதிகமாக்கிக்கொள்ளக் கண்டு, அந்த வேகத்துடன் போட்டியிடத்தக்க நிலையின்றிக், களைத்துப்போவதனைக் கண்டிருக்கலாம்; விடுதலை இயக்கத்திலும், துவக்கத்திலே மிகுதியான வேகம் காட்டுவது, இடையிலே கெடுதலை ஏற்படுத்துவதைக் கண்டிருக்கிறோம். எனவே, காங்கிரசிலே உள்ளவர்கள், வேகமாக நம்முடன் வந்து சேர்ந்துவிடவில்லையே என்ற வருத்தம் எனக்கு எழவில்லை. அவர்கள் அனைவரும், சிந்திக்கிறார்கள் நமது பிரச்சனையைப் பற்றி, அது எனக்கு, இப்போதைக்குப் போதுமானதாகத் தெரிகிறது.

ஏசட்டும்
எதிர்க்கட்டும்
பழிபேசட்டும்
பகைகொட்டட்டும்
ஆர்ப்பரிக்கட்டும்

எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்யட்டும், பரவாயில்லை; அவைகளிலிருந்து தப்பிப் பிழைத்தால்தான் விடுதலை இயக்கம் என்பதற்கே மாண்பு ஏற்படும்; ஏளனமும் எதிர்ப்பும் அழித்துவிடுமானால், உண்மையான விடுதலை உணர்வு உண்டாகவில்லை என்று பொருள். எனவே நமது விடுதலை உணர்வுக்கு எத்துணை வலிவு இருக்கிறது என்பதே, அதனிடம் காணப்படும், தாங்கிக்கொள்ளும் சக்தியின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. எனவேதான் காங்கிரஸ் வட்டாரத்தினர் நம்மைத் தாக்கும்போது எனக்கு எரிச்சல் ஏற்படுவதில்லை; அதுமட்டும் அல்ல; அவர்கள் நம்மைத் தாக்கத்தாக்கத்தான், நமது பிரச்சினையை அவர்கள் மிகக் கூர்மையாகக் கவனிக்கிறார்கள், நமது பிரச்சினை அவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது, என்பது புரிகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சியும் பிறக்கிறது.

காங்கிரசார்களிலே ஒரு சாரார்,

ஒரே அடியாகப் பிரிந்துபோய்விடுகிறோம் என்று கூறக்கூடாது. கோபம் கிளம்பும். எதிர்ப்பு ஏற்படும். ஆகவே மெள்ள மெள்ள, பக்குவமாக, எங்களுக்கு அதிகாரம் அதிகம் வேண்டும், சலுகைகள் தரப்படவேண்டும், பொருளாதார வளர்ச்சிக்கு வழி செய்தளிக்க வேண்டுமென்று பேசிக காரியத்தைச் சாதித்துக்கொள்ளவேண்டும். ஒரே அடியாக, பிரிந்துபோகவேண்டும் என்று கூறி, வடநாட்டாரின் கோபத்துக்கு ஆளாகிவிடக்கூடாது; பல காரியங்கள் கெட்டுவிடும்,

என்று சொல்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் தலைவர்களிலே தகுதிமிக்க ஒருவர், என்னிடமேகூட இப்படிக் கூறினார்.

காலமறிந்து காரியமாற்றவேண்டும், என்பது இவர்தம் கொள்கை.

இன்று மத்திய சர்க்காரிடம் குவிந்துகிடக்கும் அதிகாரத்தையும், வடநாட்டுத் தலைவர்களிடம் உள்ள செல்வாக்கினையும் கண்டு, திகைத்துப்போய்க்கிடக்கும் நிலையில், இவ்வளவு வல்லமையுள்ள வடநாட்டுத் தலைவர்களுடன் முட்டி மோதிக்கொள்வது ஆபத்தாக முடியுமே, என்ற அச்சம் இவர்களை இவ்விதம் நினைத்திட வைக்கிறது.

அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம் என்பதனை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுவது, அச்சம் பிடித்தாட்டும் நிலை, மனதில் உள்ளதை எடுத்துக்கூறக்கூட அச்சம்! இது மெள்ள மெள்ள, மிக நல்லவர்களைக்கூட, உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசவைக்கிறது. கீழ்மட்டத்தில் இப்போக்குக் காணப்பட்டால், நயவஞ்சகம் என்று கூறிவிடுகிறோம்; மேல்மட்டத்திலே இப்போக்கு இருக்கும்போது அவ்விதம் கூறாமல் இராஜதந்திரம் என்று கூறிவிடுகிறோம்.

ஒருநாள், சென்னை சட்டசபையிலே, இரும்புத் தொழிற்சாலை இங்கு அமைக்கப்படவேண்டும் என்பதற்காக வாதாடினேன, அமைச்சர்கள் வழக்கம்போல் மறுத்துப்பேசினர்; காங்கிரஸ் உறுப்பினர்கள், கட்சிப் பற்றுக காரணமாக என்னைக் கண்டித்தனர்.

கவைக்குதவாப்பேச்சு
கண்மூடித்தனம்
கருத்தற்றபோக்கு

இப்படிப் பல அர்ச்சனைகள்!!

பிற்பகல்; நண்பர் சிலருடன் ஒரு அமைச்சரைக் காணச்சென்றேன், அலுவலகத்தில், பொதுப்பிரச்சினை சம்பந்தமாக—அவரை ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி அழைத்திட. சிறிதளவு தயக்கம் எனக்கு; காலையிலே, சட்டசபையிலே, மிகக் கண்டிப்பாக, அமைச்சர்களுக்குப் பிடிக்காத விஷயமாகப் பேசினேனே, அமைச்சர் அதற்காகக் கோபமாக இருப்பாரோ என்னவோ என்ற எண்ணம் எனக்கு. ஆனால், அமைச்சர் முகத்தில் எள்ளுமகொள்ளும் வெடிக்கும் நிலையை நான காணவில்லை,. மாறாக, மலர்ந்தமுகத்துடன் வரவேற்றார்; வரவேற்றதுடன் காலையிலே, அவர் என்னை மறுத்துப்பேச நேரிட்டதற்காக வருந்தினார்;

நீங்கள் பேசுகிறீர்கள் தாராளமாக; உரிமையுடன். எங்களுக்கு அந்த நிலை இல்லை. ஆனால் எங்கள் உள்ளத்திலே, அந்த எண்ணமெல்லாம் இல்லை என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். எங்களுக்கு எல்லாம் தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் நாங்கள் உங்களைப் போலவே பேசுவதற்கு இல்லை. எங்கள் நிலை அப்படி.

என்று கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் வலிவுடன் இருப்பதுதான் நல்லது, அப்போதுதான் தமது காலுக்கு டில்லியில் ஓரளவு மதிப்பு ஏற்படும் என்பது [illegible]களின் உள்நோக்கம்.

தி. மு. கழகம் இந்த முறையில் எதிர்ப்புக் காட்டியபடி இருக்கவேண்டும், நாம், வடநாடு–தென்னாடு என்ற பேதமகூடாது என்று பேசியபடி, ஒத்துழைப்புத் தந்து, கூடிக் குலவி, கூடுமானவரையில், நமது நாட்டுக்குத் தேவையான சலுகைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது இவர்களின் திட்டம்.

கிட்டத்தட்ட இவர்களின் போக்கு, வெள்ளையர் காலத்திலே இங்கு ஜஸ்டிஸ் கட்சியினர் கொண்டிருந்த போக்குப் போன்றது. காங்கிரஸ் இயக்கம் வெள்ளை ஏகாதிபத்தியத்தை மிகப் பலமாகத் தாக்கியும், மறியல், சட்டமறுப்பு, வரிகொடா இயக்கம் போன்ற கிளர்ச்சிகளை நடத்தியும் வந்தபோது, இவ்விதம் எதிர்ப்பது பலன் தராது, எதிர்க்க எதிர்க்க வெள்ளையர்களுக்கு நம்மீது வெறுப்புத்தான் வளரும், வெறுப்பு வளர்ந்தால், நாட்டைச் சீராக்கும் முயற்சியே செய்யமாட்டார்கள்; எக்கேடோ கெட்டுப்போகட்டும் நமக்கென்ன, சுரண்டின வரையில் இலாபம் என்ற போக்கிலே இருந்துவிடுவார்கள்; எனவே நாம் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்து, அரசாங்க நிர்வாகத்திலே பங்கேற்று, பக்குவமாக நடந்து படிப்படியாக அதிகாரத்தைப் பெற்று, வலிவும் பொலிவும் பெற்று, சுயராஜ்யத்துக்குத் தகுதி உள்ளவர்களாகிவிட வேணடும், என்று கூறினர். பலர் இதே நோக்குடன், நடந்துகொண்டனர்.

அன்று ஜஸ்டிஸ் கட்சி மேற்கொண்ட முறை போன்றதாகவே, இன்று தமிழகக் காங்கிரசார் மேற்கொண்டுள்ள போக்குக் காணப்படுகிறது.

குலாம்கள்
அடிமைகள்
பதவிப் பித்தர்கள்
தாசர்கள்
பூட்ஸ் துடைப்பவர்கள்
வால் பிடிப்பவர்கள்

என்றெல்லாம் அந்த நாட்களில் ஒத்துழைத்து உரிமை பெறவேண்டும் என்று கூறிய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களைக் கண்டித்தனர் காங்கிரஸ் தலைவர்கள்.

அதேபோல, இன்று, அதேவிதமான போக்குடன் நடந்துகொள்ளும் தமிழகக் காங்கிரசாரை, திராவிட விடுதலை இயக்கத்தினர் கண்டிக்கவேண்டும் என்பதற்காக இதனைக் கூறவில்லை. காங்கிரசிலே ஒரு வகையினருடைய போக்கு எவ்விதம் இருக்கிறது என்பதை விளக்கவே இதனைக் கூறினேன்.

ஒத்துழைத்து உரிமைபெற வேண்டும் — உறவாடி உயர்வு பெறவேண்டும்—பக்குவமாகப் பேசிக் காரியமாற்றிட வேண்டும்—என்ற போக்குடைய காங்கிரஸ் நண்பர் ஒருவர், முதலிலே,

துணிவைப் பாராட்டுகிறேன்
வெளிப்படையாகப் பேசவேண்டியதுதான்

என்றெல்லாம் பாராட்டினார். ஆனால் அவர் சென்ற கிழமை என்னிடம் வந்து மிக்க கவலையுடன்,

என்ன இருந்தாலும் இராஜ்ய சபையிலே நீங்கள் இவ்வளவு பச்சையாக, திராவிடநாடு பற்றிப் பேசியிருக்கக் கூடாது......

என்று சொன்னது கேட்டு நான் திடுக்கிட்டுப்போகவில்லை, காரணம் எனக்குப் புரிந்ததால். அவரே மேற்கொண்டு, விளக்கம் அளித்தார்.

தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று புகார் கிளப்பினாலே, அங்கு கொதிப்படைந்து, வடக்கு—தெற்கு என்று பேதம் காட்டிப் பேசுவது அற்பத்தனம், அக்ரமம் இதை அனுமதிக்க மாட்டோம் என்று ஆர்ப்பரிப்பார்கள்.

மத்திய சர்க்காருக்கு அதிகாரம் மிக அதிகம்; இராஜ்ய சர்க்கார் கேவலம்,நகராட்சி போல ஆக்கப்பட்டிருக்கிறது. எங்கள் மந்திரிகள் எதற்கும் டில்லிக்குக் காவடி தூக்கிக் கொண்டு வரவேண்டி இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும்; இராஜ்யங்களுக்குஅதிக அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று வாதாடினாலே, வடக்கே உள்ளவர்களுக்கு ஆத்திரம் பிறக்கும், ஆ ஹா ! நேரு சர்க்காரையா குறை கூறுகிறாய், என்று பதிலடி கொடுப்பார்கள்.

இந்திமொழியைத் திணிக்காதீர்கள்,தாய்மொழி அழிந்துவிடும். மொழி ஆதிக்கம் நல்லது அல்ல.தென்னகம் அதனை எதிர்த்தே தீரும். இந்தி ஏகாதிபத்தியத்தை சகித்துக் கொள்ளமாட்டார்கள், எமது மக்கள், என்று பேசினாலே போதும், தீ மிதித்தவர் போலாகி, வடநாட்டுத் தலைவர்கள் பகை கக்குவர்.

அப்படிப்பட்ட இடத்துக்குப் போய், நீ ஒரே அடியாக நான் திராவிடன் — எங்கள் நாடு திராவிடநாடு—எங்கள் பண்பாடு தனியானது— நாங்கள் தனியாக வாழ்ந்திட விரும்புகிறோம்— தனிநாடு தேவை—தனி அரசு தேவை என்று பேசிவிட்டாய். இது கேட்டு அவர்கள் எப்படிச் சும்மா இருக்க முடியும்? ஆத்திரம் அவர்களுக்கு; இவ்வளவு பெரிய எண்ணிக்கை பலத்துடன் நாம் இருக்கிறோம்; ஈடு எதிர்ப்பற்ற நிலையிலே அரசோச்சுகிறோம்; நம்

எதிரில், இந்தத் தி. மு. கழகத்தான் வந்து நின்றுகொண்டு, துளியும் அச்சமின்றி, நமது அதிகாரத்தைத் துச்சமென்று எண்ணிக் கொண்டு, இதுவரையில் இங்கு ஒருவரும் பேசாததைத் துணிச்சலாகப் பேசுகிறான்; நாமென்ன மரக்கட்டைகளா? நம்மை வம்புக்கு இழுப்பதுபோல, அறைகூவி அழைப்பது போல ஒரு ஆள் வந்து பேசுவதா, அதை நாம் அனுமதிப்பதா; ஜின்னாவுக்குப் பிறகு நாட்டுப் பிரிவினைபற்றித, தில்லியில் அரச அவையிலே பேச்சுக்கிளப்பப்பட்டிருக்கிறதே! இதை எப்படி நாம் பொறுத்துக்கொள்ள முடியும். விடக் கூடாது. அனுமதிக்கக் கூடாது. அழித்து விடவேண்டும் என்றெல்லாம்தானே அவர்களுக்குத் தோன்றும். கோபம் கொதிக்காதா? அந்தக் கோபத்தின் காரணமாக அவர்கள் எதையும் செய்யலாமே. அதிகாரம் அவர்களிடம் அவ்வளவு இருக்கிறதே. நாடு அவர்களிடம். படை அவர்கள் சொல் கேட்க. இவைகளைப்பற்றி எண்ணிப் பார்க்காமல், நீ பேசிவிட்டு வந்துவிட்டாய்; பார் இப்போது அதனால ஏற்படும் விளைவுகளை. உனக்கும் உன் கழகத்துக்கும்தானே கெடுதல் இதனால். நடமாடவிடமாட்டார்களே இனிமேல். பக்குவமாகப் பேசிவிட்டு வந்திருந்தாலாவது, பொருளாதார வளர்ச்சி வேண்டும், மேலும் சிறிது அதிகாரம் வேண்டும், மொழி உரிமை வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு வரலாம்; இப்போது இழுத்துக்கொண்டு போய்ச் சிறையிலே தள்ளிவிடுவார்கள் போலிருக்கிறதே; கழகமே தடை செய்யப்படுமாமே! இந்த விபரீதம் ஏற்படக் காரணம் உன்னுடைய பேச்சுத்தானே! அப்படியா பேசுவது, ஒரே அடியாக, திராவிடன் திராவிட நாடு, தனிநாடு என்றெல்லாம். ரொம்ப அவசரப்பட்டுவிட்டாய். ஆர்வத்தை அடக்கிக் கொள்ளத் தெரியவில்லை.

இவ்விதமாக அந்த நண்பர் பேசிவிட்டு, மேஜைமீது ஒரு நாளிதழை வீசி எறிந்தார்.

தி. மு. க. மீது நடவடிக்கை எடுப்பது உறுதி ?

தமிழக அமைச்சருக்கு டில்லி அவசர அழைப்பு

மதுரை, ஜுன் 1

திராவிடநாடு பிரிவினையை வலியுறுத்திக் கொண்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது நடவடிக்கை எடுப்பது முடிவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

தமிழக முதல் அமைச்சர் திரு. கே. காமராசர் நாளை புது டில்லியில் நடைபெறும் தேசிய ஒருமைப்பாடு மாநாட்டில் கலந்துகொள்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது எவ்வித நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி அம்மாநாட்டில் வெளியிடுவார். பிரிவினையை வலியுறுத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்போவது உறுதியாகி விட்டது.

❋

காங்கிரஸ் நண்பர், நாளிதழில் காணப்பட்ட செய்தியால், பதறிப்போய்ப் பேசினார். எல்லா இதழ்களுமே, இதுபோலச் செய்திகளை வெளியிட்டிருந்தன. ஊரெங்கும் இதே பேச்சுத்தான். இவ்வளவு கூறுவானேன், தம்பி! நானே, சென்றகிழமை அரசியல் இருந்த நிலைமைகளைக் கண்டபோது, இக்கிழமை உனக்கு மடல் தீட்ட இயலுமா என்பதுபற்றி ஐயப்பாடுகொண்டிருந்தேன்.

மங்களம் பாடப்போகிறார்கள், தெரியுமா!

மாட்டிக்கொண்டார்கள் பயல்கள், வசமாக!

கண்மண் தெரியாமல் ஆடினார்களே, இனி, கப்சிப் வாயைத் திறக்கக்கூடாது, தெரியுமா......

ஒழிந்துபோகட்டுமய்யா. ஊரிலே ஒரே அமளி இதுகளால்......

நம்மை யார் என்ன செய்ய முடியும் என்று மண்டைக்கர்வம், இதுகளுக்கு. சட்டம் எத்தனை நாளைக்குத்தான் சகித்துக்கொள்ளும், இப்போது, கொட்டப்போகிறது; பயல்கள் இனிப் பெட்டிப் பாம்புதான.

கழகத்தைத் தடை செய்துவிடத்தான் போகிறார்கள்.

பிரிவினைப் பேச்சுப் பேசினால், பிடித்துப் போடுவார்கள் சிறையில், ஐந்து வருஷம் ஆறு வருஷம்.

நாட்டைப் பிரிக்கச் சொல்வது இராஜத் துவேஷக் குற்றம் இனி; தெரியுமா? இராஜத் துவேஷக் குற்றத்துக்கு என்ன தண்டனை தெரியுமா? நாடு கடத்தலாம்! ஆயுள் தண்டனை தரலாம்! சுட்டுக் கொல்லலாம், பலாத்காரம் தலைதூக்கினால். முடிந்ததா இதுகளோட கதை! ஒழியட்டும்!

அவன் கெட்டிக்காரன்யா, இப்படி வரப்போவது தெரிந்துதான், சாமர்த்தியமாக இதுகளைவிட்டுப் போயேவிட்டான்......

பிரிவினை கூடாது ' என்று பேசவும் ஆரம்பிச்சாச்சி......

தம்பி! ஊரார் உரையாடல் இவைபோல; தெரியுமே உனக்கு.

கணக்கே போட ஆரம்பித்தார்கள், அவசரக்காரர்கள்—எவ்வளவு பேர் பிடிபடுவார்கள் என்பதுபற்றி.

கழகத் தோழர்களுக்குள் பேச்சே இது குறித்துத் தான் — நமக்கு எப்போது அழைப்பு வரும் — என்பது பற்றி, ஆர்வத்துடன்.

நாடு பிரியும் பேச்சு இவர்கள் பேசினால், மற்றவர்களுக்கு என்னவாம்? இவர்கள் மக்களிடம் பேசட்டுமே நாடு பிரியக்கூடாது என்று. அதை விட்டுவிட்டு, நாட்டுப் பிரிவினைபற்றிய பேச்சே கூடாதே — சட்ட விரோதம் — தடைபோடுவோம் — என்று மிரட்டுவது. இதுதான் சுயராஜ்யமா? இதுதான் பேச்சு உரிமையா?

நாட்டுப் பிரிவினைபற்றி, தி. மு. கழகம் பேசப்பேச, அதைக் கேட்டு, மக்கள் மனம் கெட்டுப் போகிறதாம், பிரிவினை மனப்பான்மை வளருகிறதாம், பிளவு சக்தி வளருகிறதாம்; அதனால்தான் பிரிவினைப்பற்றிப் பேசக் கூடாது அதற்காக ஒரு கழகம் இருக்கக்கூடாது என்று தடை செய்யப் போகிறார்கள்; சட்டம் போடப் போகிறார்கள்.

தி. மு. க. நாட்டுப் பிரிவினைபற்றிப் பேசினால், ஆட்சியிலே இருக்கிற காங்கிரசார் நாட்டு ஒற்றுமை பற்றிப் பேசட்டும்; அவர்கள் பேச்சை மக்கள் கேட்கிறார்களா இல்லையா என்று பார்ப்பதுதானே! ஏன் அதிலே காங்கிரசாருக்கு நம்பிக்கையும் தைரியமும் இல்லை. சட்டத்தைத் துணைக்கு அழைத்து, தடை போடுவது என்றால், இவர்கள் தங்களைக் கையாலாகாதவர்கள் என்று உலகுக்கு அறிவித்துவிட்டதாகத் தானே பொருள் ஏற்படும்.

இவ்விதமாகப் பேசத் தலைப்பட்டனர் பலர், தமிழகமெங்கணும்.

தம்பி! நான் கண்டு பெருமிதம்கொண்டேன்— மாநாட்டுக்கு நாள் குறிப்பிட்டானதும் கழகத் தோழர்கள் அதற்குச் செல்வதற்கான வழிவகை பற்றிப் பேசிக்கொண்டு, புறப்பட முயற்சி எடுத்துக்கொண்டும் ஆர்வத்தோடு இருப்பார்களே — அதுபோன்ற எழுச்சியுடன், நமது தோழர்கள் தடை வரும் மீறிடவேண்டும்; சிறை என்பார்கள், சரி என்று செப்பிட வேண்டும் என்று பேசி மகிழ்ந்திருந்ததை.

இதற்கு முன்பும் பலமுறை தடைபோடப்படும்— கழகம் கலைக்கப்படும் — என்ற பேச்சுக் கிளம்பியது உண்டு என்றாலும், இம்முறை, திட்டவட்டமான அறிவிப்பு என்ற விதமாக; இந்தப் பிரச்சினை கிளம்பிற்று. இதழ்களிலும் வானொலியிலும், தேசிய ஒருமைப்பாடு மாநாடு கூடுவதே தி. மு. கழகத்தைத் தடை செய்யத்தான் என்று அறிவிக்கப்பட்டது.

எனக்கு அப்போதே தெரியும்,

என்றுகூறித் தலை அசைத்தனர், அரசியல் அனுபவத்தைச் சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி பேசிடும் அருங்கலைவாணர்கள்.

> பதினைந்து ஐம்பதாகிவிட்டதே என்று பயந்தீர்களே! ஐம்பது நூறு ஆகுமோ நூற்று ஐம்பது ஆகுமோ என்று எண்ணி ஆயாசப் பட்டீர்களே, பார்த்தீர்களா? பலூன் வெடிக்கப்போகிறதே, தெரியுமா?

என்று பேசிக் கேலி செய்தனர், நமது வளர்ச்சி கண்டு மனம் பொறுதார்.

இங்கும் சரி, அல்லது தில்லி வட்டாரத்திலேயும் சரி, ஒரு காங்கிரஸ் தலைவர்கூட, அப்படி ஒன்றும் இல்லை, தடை போடப்போவது இல்லை, என்று அறிவிக்கவில்லை, ஊரெங்கும் ஒரே கொதிப்பு.

என்றைக்காவது ஓர் நாள் இது வந்துதீரவேண்டிய நிலைமை—எதிர்பார்க்காமலிருப்பவன் ஏமாளி—ஆனால் சதா அதனையே எதிர்பார்த்துக் குழப்பிக்கிடப்பவன், கோழை! நாம், நாமாக ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியத்துக்காக, என்னவிதமான கஷ்ட நஷ்டம் ஏற்கவும் உறுதிகொண்டதால்தான், ஊரிலே பெரிய புள்ளிகள் என்றும் அரசியலிலே 'ஜாம்பவான்'கள் என்றும், அகிலம் சுற்றிய அறிவாளர் என்றும், ஆட்டிப்படைத் திடும் ஆற்றல்மிக்கோன் என்றும் விருதுகள் பல பெற்றவர்கள், நம்முடன் இல்லை. நம் பிரச்சினையை ஆதரிக்க முன்வரவில்லை என்று மிக நன்றாகத் தெரிந்திருந்தும், உள்ள இதழ்கள் அவ்வளவும், நம்மைக் கண்டிப்பதைக் கடமையாகவும், தூற்றுவதைத் தொண்டு ஆகவும், கேலி செய்வதைக் கலையாகவும் கொண்டு இயங்கி வருகின்றன என்பதனை அறிந்திருந்தும், நமது இரத்தம் சிந்தப்பட்டால், கண்ணீர் சிந்தவாவது இவர்கள் முன் வருவார்களா என்பது பற்றிய கவலையுமற்று, நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற இலட்சியத்தின் பளுவை நாம் தான் தாங்கியாகவேண்டும்; ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு நாம்தான் ஈடுகொடுத்தாகவேண்டும், இலட்சக் கணக்கானவர்களோ, ஆயிரக்கணக்கிலோ அல்லது நூற்றுக்கணக்கிலோ, எந்த அளவில் நம்முடன் பயணம் நடாத்துபவர் கிடைக்கின்றனரோ, அதுபற்றியும் கவலை கொள்ளாமல், நம்மை நாம் ஒரு இலட்சியத்துக்கு ஒப்படைத்துவிட்டோம் என்ற உணர்வுடன் பணியாற்றி வருகிறோம். பேச்சால் எழுத்தால், பணியாற்ற இயலாத நிலை ஏற்பட்டால், அடக்குமுறை கொண்டு நாம் தாக்கப்பட்டால், நமது செந்நீரும் நமக்காகச் சிந்தப்படும் கண்ணீரும், நமது பேச்சு, எழுத்து ஆகியவற்றினை விட வல்லமை மிக்கதாகி, இலட்சிய வெற்றிக்கு வழிகோலும் என்ற திடமான நம்பிக்கையுடன் இருந்து வருகிறோம்.

உள்ளபடி சொல்கிறேன் தம்பி! நமது கழகத்தைத் தடைசெய்யப் போகிறார்கள் என்று பேச்சுக் கிளம்பிய போது எனக்குத் திகிலோ, கோபமோ எழவில்லை, விடுதலை இயக்கத்திலே காணவேண்டிய பல கட்டங்களிலே, மிகமுக்கியமான, எழுச்சிமிக்க கட்டத்தைக் காணப்போகிறோம் என்ற தெம்பும், இராஜ்ய சபையிலே பேசினேன் அது பத்தோடு பதினொன்றாகிவிடாமல், பரபரப்புக்குரியதாகமட்டுமல்ல, ஆளுங்கட்சியினர் ஆர்ப்பரித்து எழுந்து அடக்குமுறையை அவிழ்த்துவிட்டாக வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியது ஆகிவிடுகிறது என்பதிலே பெருமிதமும் கொண்டேன்.

ஒழித்துக்கட்டிவிடப்போகிறோம் இந்தப் பொதுத்தேர்தலில் என்று காங்கிரஸ் கட்சி தி. மு. கழகத்தை மிரட்டிற்று. பொதுமக்களோ 34 இலட்சம் வாக்குகளைக் கொடுத்து 50 சட்டமன்ற இடங்களையும், 7 பாராளுமன்ற இடங்களையும் தந்தனர்.

பாராளுமன்றத்திலே. தி. மு. கழகத்தார் நாட்டுப்பிரிவினைபற்றிப் பேசலாயினர்.

அதனால் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது.

இனி தி. மு. கழகப் பிரச்சாரத்தை மறுத்துப்பேசி வெற்றிபெற முடியாது என்ற திகில் கொண்ட காங்கிரஸ் கட்சி, தி. மு.கழகத்தைச் சட்டவிரோதமானது என்று தடைசெய்து, தி. மு. கழகத் தோழர்களைச் சிறையில் அடைத்தது.

இப்படி, நம்முடைய பிள்ளைகள் வரலாறு படிக்கத்தானே வேண்டிவரும் — இந்தக்கட்டம் இல்லையேல், விடுதலை பெறுவது ஏது?

எனவேதான், இந்தக்கட்டம் இவ்வளவு விரைவாக வருகிறதே என்பதனை எண்ணி நான் மகிழ்ச்சியுற்றேன். ஆனால், தி. மு. கழகம் இருப்பதனால்தான், ஒரு நாளும் இல்லாத திருநாளாக தமிழகத்தாரில் எழுவருக்கு தில்லி மந்திரிசபையிலே இடம் கிடைத்தது, மேலும் பலசலுகைகள் கிடைக்க வழி இருக்கிறது என்பதனால் உற்சாகம் கொண்ட காங்கிரஸ் நண்பர், கழகம் தடைசெய்யப்பட்டால் நட்டம் கழகத்துக்கு அல்ல, தமிழகக் காங்கிரசுக்குத்தான் என்பதனை உணர்ந்து, ஐயோ! தடைசெய்யப் போகிறார்களாமே! ஏன் அவ்வளவு சூடாகப்பேசினீர்? என்று என்னைக் கேட்டார்! சூடு சுவையும் கருசிறந்து என்பது நமக்குத் தெரிந்த அளவுக்கு அவருக்குத் தெரியாதல்லவா?

வேலையற்றதுகள்

வெட்டிப்பேச்சுக்காரர்கள்

தீயசக்திகள்

ஒருசிறுகும்பல்

என்று, மிகப் பெரிய ஆணவத்தைத் துணைகொண்டு, காங்கிரஸ் தலைவர்களும் அவர்களின் தயவை நாடிப் பிழைத்துக்கிடக்கும் பேர்வழிகளும், நம்மைப்பற்றிப் பேசுவது வாடிக்கை.

உங்க அண்ணாத்துரைக்கு, அரசியல் தெரியுமா? என்று ஒருவர் கேட்பார்! படித்தால்மட்டும் போதுமா? என்று இன்னொருவர் கேட்பார்.

வரலாறுதெரியுமா, பூகோளம் தெரியுமா; இலக்கியம்தெரியுமா, இலக்கணம் தெரியுமா? என்று கேட்பார் மற்றொருவர்.

கலை தெரியுமா? என்று கதைப்பார் ஒருவர்; கதை எழுதிப் பிழைப்பவர்கள் என்று குத்திக்காட்டுவார் இன்னொருவர்.

தியாகம் செய்திட முடியுமா? என்று கடாவுவார் ஒருவர், தீரம் உண்டா வீரம் உண்டா என்று தீப்பொறி கிளப்புவார் இன்னொருவர்.

இப்படிப்பட்டவர்களெல்லாம் அரசியலில் இருக்கலாமா என்று இடித்துக் கேட்பார் ஒருவர்; இதுகளின் பேச்சை யார் மதிக்கிறார்கள் என்று வியப்பு வெளியிடுவார் வேறொருவர். எல்லாவற்றுக்கும்முத்தாய்ப்புவைப்பதுபோல, ஒருவர் கேட்பார், இங்கே நாலுபேர் பேசித்திரிகிறார்களே தவிர, ஆந்திரத்திலே, கேரளத்திலே, கர்னாடகத்திலே, ஒரு ஆள் உண்டா இதுகளை ஆதரிக்க என்று கேட்பார்; இவர் திங்கட்கிழமை திருவனந்தபுரத்தில் பேசிவிட்டுச் செவ்வாய்க்கிழமை காகிநாடா, புதன்கிழமை பெல்காம், வியாழக்கிழமை விசாகப்பட்டினம், வெள்ளிக்கிழமை கள்ளிக்கோட்டை, சனிக்கிழமை சாத்தூர், ஞாயிற்றுக்கிழமை பெங்களூர் என்று இந்தப்படி சுழல்வேக, சூறாவளிப் பயணம் நடத்தி, அறிவை வாரி வழங்கிக்கொண்டு இருப்பவர் போன்ற 'தொனி' கிளப்பி.

தம்பி! இவ்வளவுதான் இவர்கள் நமது கழகத்தைப்பற்றி கொண்டுள்ள மதிப்பீடு, எனினும் கவனித்தனையா, இங்கிலேதான் நமது கழகத்தது என்று 'இத்தனை பெரியவர்கள்' சொன்னபிறகும், கழகம் அகில இந்திய அரசியலிலே ஒரு கேள்விக் குறியாகிவிட்டது! இந்திய துணைக்கண்டத்தில் உள்ள இதழ்கள் யாவும், அலசிக்

காட்டிட வேண்டியதோர் பிரச்சினையாகிவிட்டது. ஆளுங்கட்சி மட்டுமேயன்றி, நாட்டில் உள்ள கட்சிகள் பலவும் ஆராயவேண்டிய பிரச்சினையாகிவிட்டது. அது மட்டுமா? கழகம், வளராதிருக்க, பிரிவினைப் பேச்சு வளராமலிருக்க என்ன செய்யலாம்? தேசிய ஒருமைப்பாடு எப்படி ஏற்படுத்துவது? என்பதனை ஆய்ந்தறிந்து வழி வகை காண அகில இந்திய அடிப்படையிலே ஒரு பெரிய முயற்சி செய்யப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. முப்பத்து ஏழு பேர்களாமே, ஆய்ந்தறிந்து வழிமுறை கூற, தேசிய ஒருமைப்பாடு மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்த பேறறிவாளர்கள்!! அவ்வளவு 'மூளைபலம்' — 'கூட்டு பலம்' — தேவைப்படுகிறது, வெட்டிப் பேச்சுக்காரர்களாமே கழகத்தார், அவர்களின் போக்கினால் ஏற்பட்டுவிட்ட விளைவுகளைச் சமாளிக்க. வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

மதுரையிலே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடைபெற்ற போதாகிலும், முதலமைச்சர் காமராசர் சற்று முடுக்காக, "தி. மு. கழகம்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். அதை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம்" என்று பேசினார். இம்முறை, கழகத்தைத் தடைசெய்யப் போகிறது இந்தியப் பேரரசு என்றதும், பழைய முடுக்கு இருக்கும் இடம் தெரியவில்லை, தில்லி சென்றார், உத்தரவு என்ன என்று கேட்டு அதன்படி நடந்திட.

கசப்பாலும் குரோதத்தாலும் பொறாமையாலும் பொச்சரிப்பாலும், சிலருக்கு இயல்பாகிவிட்ட இழிகுணத்தாலும், தி மு. கழகத்தைப்பற்றி மிகக் கேவலமாகப் பேசுகின்றனர் என்றாலும், இன்றைய அரசியலில், கவனித்துத் தீரவேண்டிய, சிக்கல் மிக்க, சங்கடம் மிகுந்த, பெரிய பிரச்சினையாகிவிட்டிருக்கிறது, தி. மு. கழகம் என்ற பேருண்மையை எவரும் மறைத்திட முடியாது, தம்பி! இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை உருவாக்கியதிலே உனக்கும் எனக்கும் ஓரளவு பங்கு இருக்கிறது என்பது எண்ணி மகிழத்தக்கது, உரிமையுடன் பெருமிதம் கொள்ளத்தக்கதாகும்.

ஒன்று கூறுகிறேன், தம்பி! ஒரு சிலர் கருதுகிறார்கள், தி. மு. கழகத்தார் தெளிவாகப் பேசுவார்கள், தீரமாக நடக்கமாட்டார்கள் என்று. மக்களின் மனதில் பதியும்படியாகப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவார்கள், ஆனால், உடலிலே தியாகத் தழும்பு ஏற்கத் துணியமாட்டார்கள். கண்டனக்கூட்டம் நடத்துவார்கள், காரிருள் கொண்ட சிறையில் அடைபட்டுக் கிடக்கமாட்டார்கள், என்று சிலர் கருதுகிறார்கள். இவர்கள் பிறக்கும்போதே வீரவாளுடன் பிறந்ததுபோலவும், நாம் கைவளையுடன் பிறந்தது போலவும் எண்ணிக் கொண்டு பேசுகின்றனர். பகை உணர்ச்சி காரணமாக இவர்கள் இதுபோலப் பேசுகின்றனர் என்றாலும், தம்பி! இந்தத் தவறான எண்ணம் தகர்ந்து போகத் தக்கதோர் நிலை விரைவில் ஏற்படவேண்டும் என்று நான் மெத்தவும் விரும்புகிறேன். ஏளனம் பேசும் இவர்கட்காக அல்ல, ஏத்தித் தொழுதனவெல்லாம் ஏளனம் பேசும் போது கேட்டுச் சிரிப்பதல்லால் வேறு ஏதும் தோன்றவில்லை—நான் கூறுவது இத்திறத்தினர் பொருட்டல்ல—நாம், திராவிடநாடு தனி நாடு ஆதல் வேண்டும் என்பதற்காக, எந்த விலையும் கொடுக்க, எதனையும் இழக்க, எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கச் சித்தமாகிவிட்டோம் என்பதனை உலகு உணரவேண்டும்! அடக்குமுறை அவிழ்த்துவிடப்பட இருக்கிறது என்று கேள்விப்பட்டபோது நான் மகிழ்ச்சியால் துள்ளிக்கொண்டிருந்தேன், நமது நோக்கத்தின் தூய்மையை, கொள்கையில் உள்ள உறுதியை, மாற்றாரும் உணரத்தக்க விதத்தில், நாம், அடக்குமுறையை ஏற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது என்று எண்ணினேன். நாம் பேசுவதைக் கேலி செய்திடலாம்—நம்மை அடக்குமுறை தாக்கிடும்போது, நமது குருதி கொட்டப்படுவது கண்டேனும், நமது கொள்கையை ஏற்றுக்கொள்ளக் கூடவேண்டாம், நமது உள்ளத் தூய்மையை, உறுதியை உணர்ந்துகொள்வார்களல்லவா அதுபோதும் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன்.

தியாகத்துக்குத் தயாராக இருக்கிறோம் இருக்கிறோம், என்று எத்தனைமுறை முழக்கமிட்டு என்ன பலன்? நம்மிலே பலர் அடக்குமுறையின் கோரப் பற்களுக்கு இடையிலே சிக்கிப் பிய்த்தெறியப்படுவதை நம்மை நம்ப மறுக்கும் நல்லவர்கள் கண்குளிரக் காண வேண்டுமே,

நாடு கடத்தினார்கள்
நையப் புடைத்தார்கள்
பத்தாண்டு சிறைத் தண்டனை
சுட்டுக்கொல்ல உத்தரவு

என்பன போன்றவைகள், நம்மை அடக்க, அச்சத்தால் பீடிக்கப்பட்ட ஆட்சி மேற்கொண்டு தீரவேண்டிய முறைகளாகும்.

நறுக்கி எடுத்து, கொதிக்கும் நீரில் வேகவைத்து, சுவைகூட்டியான பிறகே பச்சைக் காய்கறி பண்டமாகிறது, உண்டு மகிழ.

மரண வாயிலில் போய்ப் போய் வந்தபிறகே, தாய், பிள்ளைப்பேறு காண்கிறாள்.

கீழ்மண் மேலாக உழுது கிளறியபிறகே, போட்டது முளைக்கிறது.

கடைந்தால்தான் மோரிலிருந்து வெண்ணெய் கிடைக்கிறது.

விடுதலை மட்டும் என்ன, வாய்ப்பந்தலிட்டு வார்த்தைக் கொடி படரச்செய்து, பறித்தெடுத்திடும் காயோ? இல்லை, தம்பி, இல்லை' நாடு விடுபட நானில மதனில் கொட்டப்பட்ட இரத்தம், வெள்ளம் என்னலாம். கொய்தனர் தலையினை! கொளுத்தினர் உயிருடன்! இடித்தனர் மனைகளை! ஒடித்தனர் கரங்களை! பறித்தனர் கண்களை! — என்றெல்லாம் படிக்கிறோம். நாடு மீட்டிட வீரர் நடாத்திய கிளர்ச்சிக் காதைகளில்.

> ஏடா! மூடா! நாடா வேண்டும், உனக்கு?
> நத்திப் பிழைத்துக் கிடந்திட வேண்டியவன்,
> பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் என்று
> பிதற்றித் திரிகிறாயாமே! கற்றது அது.
> அதனால்? வல்லமை மிக்க எமது ஆட்சியை
> மாற்றிடவல்லையோ?

என்று கேட்டிடும் மமதையாளன் முன் மண்டியிட மறுத்து, வெட்டுண்டு கீழே சாய்ந்த வீரர் எத்தனை பேர்!!

தாயகத்தின் தளைகளை நொறுக்கிடவேண்டும் என்றா கூறினான் இத்தருக்கன்? நொறுக்கிடு இவன் மண்டையை!! நாய் நரி பொறுக்கித் தின்னட்டும் பிணத்தை!! — என்று கொக்கரித்த கொடுங்கோலர்களின் வாளுக்குப் பலியானோர், எத்தனை எத்தனையோ பேர்கள்.

"எனக்கென்று ஓர் வீடு உண்டு — இன்றோ அது வெறும் மண்மேடு! காதலித்து மணங்காள் கட்டழகி — அவள் கண்டதுண்டமாக்கப்பட்டாள், கற்பினை இழந்திட மறுத்ததால். ஒரே மகன்! ஓயாச் சிரிப்புக் காரன்! யானையின் காலிலிட்டுக் கொன்றனர் அவனை —என் மகன் என்பதால்—என் மொழி பேசியதால். இவைகளை எண்ணும்போது நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது. ஆனால், எனக்கென்று ஒரு நாடு உண்டு — அதிலே ஆதிக்கம் செலுத்துவது வேற்று நாட்டான்—அதை நீக்க வகையற்றுக் கிடக்கிறேன், நெடுந் தொலைவில், இதனை எண்ணிடும்போதுதான் வேதனையும் வெட்கமும் வேலாகி இதயத்தில் பாய்கிறது வீடற்றுக் கிடக்கலாம், நாடற்றுக் கிடப்பதா? சாவே, வா!"—என்று கத்தும் கடல் நடுவே தீவினிலே சிறையினிலே கதறிய வீரர்களின் தொகை குறைவோ?

தம்பி! வரலாற்று ஏடுகளைக்கூட விடு, பிறகு பார்த்திடுவோம். **கொடிகாத்த குமரன் அடிபட்டு மாண்டது அறியாயோ? செக்கிழுத்த சிதம்பரனார், வேற்று நாடோ?** இவைதமை அறிந்துள்ள நாம், உள்ளத் தூய்மையுடன் ஏற்றுக்கொண்டுள்ள ஒரு இலட்சியத்துக்காக, எப்போது காணிக்கை செலுத்துவது எவ்விதமான காணிக்கை? விடுதலை அதனைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

'காணிக்கை' செலுத்தும் காலம் வந்துவிட்டது என்று காத்துக்கிடந்த, நமது எண்ணத்திலே, மண்ணை அள்ளிப் போட்டுவிட்டனர், நம்மைத் தடைசெய்யக் கூடிய தகுதிமிக்கோர். ஏனோ? விளங்கவில்லை.

பொதுத்தேர்தல் முடிந்தது, காங்கிரஸ் போட்ட கணக்குப் பொய்த்துப் போய்விட்டது.

ஐம்பதின்மர் சட்டசபையில் — எழுவர் பாராளுமன்றத்தில்.

இராஜ்யசபையில் பேசும் வாய்ப்பு. முதல் பேச்சு. முழுமூச்சுடன் எதிர்ப்பு. அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. கழகத் தோழர்கள் இரத்தக் காணிக்கை செலுத்தினர்......

இம்முறையில் மின்னல் வேகத்தில், சூடும் சுவையும் மிக்க நடவடிக்கைகள் தொடரும் என்று எதிர்பார்த்துக்கிடந்தேன். என்னையும் உன்னையும் ஏமாற்றி விட்டனர், நம்மீது கணை தொடுக்கக்கூடியோர், காரணம் என்ன? கூறுவார் காணோம்.

இன்னின்ன காரணங்களுக்காக, தி. மு. கழகம், தடை செய்யப்படுகிறது; தடை மீறினால் இன்னின்ன விதமான தண்டனைகள் தரப்படும் என்று சூடும் சுவையும் மிக்க செய்தி வெளியிடப்படும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம்—இன்னின்னார் தலைமையிலே இன்னின்ன கமிட்டி அமைக்கப்படுகிறது, இன்னின்ன விதமான வேலைகளைக் கமிட்டிகள் மேற்கொள்ளும் என்ற உப்புச்சப்பற்ற செய்தியே தரப்பட்டிருக்கிறது.

காங்கிரசை அறைகூவிக் களம் வரச்சொல்லி அழைத்தவரும், தடைமீறி உள்ளே நுழைந்தால், சிறைதான் காந்தியாருக்கு என்று அறிவித்தவரும், திருவிதாங்கூர் பாரதத்தில் பிணைபட்டு இருக்கப்போவதில்லை, தனிநாடு ஆகிவிடுகிறது, என்று 'பிரகடனம்' செய்தவருமான, சர். சி. பி. இராமசாமி ஐயர், பிரிவினை சக்திகளைக் கவனித்துத் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட வழிகூற அழைக்கப்பட்டிருக்கிறார். **துகில் உரிந்த துச்சாதனனுடன், துரோபதை செல்கிறாள் கடைவீதி, புதுச்சேலை வாங்க!!** விந்தைமிகு இந்தச் செய்திபற்றி அடுத்த கிழமை.

அண்ணன்,

அண்ணாதுரை

பண்டைத் தமிழர் காதலின் மாட்சி

[வை. செயராமன்]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்; சேரனும் சோழனும், பாண்டியனும் சுதந்திரமாய் ஆண்டிருந்த காலமது; சுதந்தரத் தமிழ் பாடும் புலவரும் கவிஞரும் பொன்னாட்டின் புகழ்பாடி வாழ்ந்திருந்த நேரமது. கலிங்கமும் சாவகமும் ஈழமும் தமிழனுக்குத் தலை வணங்கி வாழ்ந்திருந்த அந்நாளில் செல்வவளத்திற்கோர் இடரின்றித் தமிழர் பெருவாழ்வு பெற்றிருந்தனர். நித்திலமணிக்கூரை வேய்ந்த நீல வானத்தில் உச்சியிலே எழில் சேர்த்துக்கொண்டிருந்த அழகு நிலவின் குங்கும ஒளிபட்டுப் பளபளத்தது, நெய்தல் நிலத்துக் கடற்கரைப் பட்டினமொன்று.

பொருள்மிகப் பெற்ற செல்வத் தமிழரும், வணிகருமே வாழ்ந்திருந்த அந்நெய்தற் பட்டினத்தில் வானத்துக் கருமுகிலை வருடவெண்ணும் குன்றனைய மாளிகையொன்று மாக் கடலோரத்தில் நிமிர்ந்து நின்றது—தென்னிலங்கை வேந்தன்போல். மாளிகையின் முன்புறம் வெண் மணற்பரப்பாலமைந்த நெடுமுற்றம் வெண்ணிலவின் தண்ணொளியால் எழில் சேர்த்து மின்னியது. நெடுந்தேர் வழங்கும் அம்முற்றம் மாளிகைக்கோர் அழகு சேர்த்தது. அவ்வழகிய முற்றத்தின்கண் தலைவி தன் தோழியர் கூட்டத்தோடு செங்காந்தள் விரல்கொண்டு பந்தாடும் பாங்கினைக் காணக்கண் கோடி கண்டிப்பாய் வேண்டும்!

இங்ஙனம் அமைந்த அவ்வின்பக் காட்சிதனைக் காணும் பேறு பெற்றான் ஒரு கன்னித் தமிழ் மகன். களம் பல கண்ட காளையவனுடைய கவனத்தைக் கவர்ந்திழுத்தது பாவையரின் பந்தாட்டம். இல்லையெனில், அவன் பார்வை அப்பக்கம் பாய்ந்துவரக் காரணம் அத்தலைவியின் தண்ணொளி வீசும் வெண்ணிலவு முகம்தானென்பதைக் கூறவும் வேண்டுமோ? போராடும் களத்தின் மாறனவன் பாவையின் பேரன்பை—காதலைப்பெற விழைந்தான். அவள்மேல் அவன் கொண்ட காதல் அவனைப் பித்தனுக்கிப் பிதற்றச் செய்தது. மாளிகையின் புறத்தேயிருந்து மங்கையவளின் பந்தாட்டப் பாங்கினையும், பாலைச் சிரிப்பையும், குவளைமலர்க் கண்களையும் பார்த்துப் பரவசமடைந்த அவனது நெஞ்சமெல்லாம் அவள் நினைவு நிறைந்ததென்றாலும், அத்தையலின் உள்ளமோ கண்களோ அவன்பாற் செல்லவுமில்லை—காதல் கொள்ளவுமில்லை; அவனுக்குத் தன் இன்முகம் காட்டவில்லை — இதழமுதம் தரவில்லை; இன்னமும் அவன் காதலை அப்பாவை உணர்ந்து கொள்ளவில்லை.

மனிதனின் மனம் தான் வாழும் மனிதனுக்கே பகையாகச் சில சமயம் ஆவதுண்டன்றோ! அதுபோன்றே இவ்விடம் தலைவனது மனம் தலைவனுக்கே பகையாகி வாட்டியது. தன்னை வருத்தும் தன் மனத்திற்குத் தலைவன் கூறும் நல்லுரைகள் பண்டைத் தமிழ் மக்களின் காதல் மாட்சியைத் தெள்ளென விளக்கும் தெளிவுரைகளாகும். அந்நல்லுரை யாவரும் படித்துப் போற்றிப் பாராட்ட வேண்டியதொன்றாகும். அஃதாவது:—

"ஏ நெஞ்சே! பால்போலும் வெண்ணிலவில் நிலவுப் பயன் கொள்ளும், மணல் பரந்து பளபளக்கும் நெடுமுற்றமது. நெடுந்தேர் வழங்கும் அம்முற்றத்தில் தன்னோடு தன் பெருங்கண் தோழியர் கூட்டமும், மகிழ்ந்திருக்க விழைந்து செங்காந்தள் விரல்களால் பந்தாடுகிறாள் தலைவி. அவள் நம்மை அறிந்திலள். நம்மிடம் அன்பில்லாதவளாக இருக்கின்றனள். அவள் என்னுடைய அன்பை அறிந்து, தன்னுடைய அன்பை—காதலை எனக்கு அருளுகின்றவளானாலும், அன்றி, அருளாதவளானாலும், அதைப்பற்றி எண்ணாது, யான் அவள் பின் சென்று பணிந்து நிற்கின்ற இழி நிலை கண்டு அவ்விழிநிலைக்காக நீ என்னை வெறுக்காதே! யான் அங்ஙனம் பணிதற்குக் காரணம், என்னால் தாளமுடியாத கொடிய காதல் நோயாகும். அந்நோய் என்னை விட்டு அகல வேறு மருந்து ஏதும் பயன்தராது. அவள் பின் சென்று பணிந்து நிற்கும் அந்நிலையே என் நோய்தீர்க்கும் ஒரே மருந்து. எனவே என் உள்ளமே! நீ என்னை வெறுக்காதே!"

மேற்கண்ட வாசகங்கள் விளக்குகின்ற பண்டைத் தமிழரது காதல் மாட்சிதான் என்னே! எத்தனையுர்விக் காதல் பெரிதென எண்ணும் அத்தலைவனது காதல் மாட்சி போற்றுதற் குரியதென்றால், அக் கருத்துக்களை சுந்தரத் தமிழிலே வடித்தெடுத்துக் கவிதையாக்கி நமக்களித்த சங்கப் புலவர் 'பூதங்கண்ணனார்' அதனினும் பன்மடங்கு போற்றுதலுக்குரியவரே! போற்றுதலும் பாராட்டும் வெறும் மனத்தளவிலே — பேச்சளவிலே இல்லாமல் செயலளவில் ஏற்படவேண்டும். உலகெல்லாம் தமிழ் முழக்கம் தழைக்க வேண்டும்.

காதல் மாண்பு விளக்கும் புலவரது செய்யுள் இதோ!:—

பெருங்கண் ஆயம் உவப்பத் தந்தை
நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல்
முற்றத்துப்
பந்தொடு பெயரும் பரிவு இல்ஆட்டி,
அருளினும் அருளாள் ஆயினும் பெரிது
அழிந்து,
பின்நிலை முனியல், மாநெஞ்சே!
என்னதூஉம்
அருந்துயர் அவலம் தீர்க்கும்
மருந்து பிறிதில்லை யான்உற்ற நோய்க்கே!

—பூதங்கண்ணனார்,
நற்றிணை 140.

★

பிறப்பு

காஞ்சி நகரத் தி. மு. க. செயலாளர் வி. என். மார்க் அவர்களின் துணைவியார் 29-5-62ல் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். தாயும் சேயும் நலம்.

விடுதலை

ப. இளவழகன்

விடுதலை — என்றால் பொருளென்ன? ஓய்வு, நீக்குதல், பிரிதல், விடுபடுதல் என்றெல்லாம் ஒரு சொல்லுக்கொரு சொல் சிறிதளவு மாறுபட்ட பல பொருள்களுண்டு.

செய்யாத குற்றத்திற்காகச் சிறையினுள்ளிருப்பவன் விடுதலையைப்பற்றிக் கவலைப்படாமலே இருப்பதுண்டு. செய்த குற்றத்திற்குத் தண்டனையாக சிறை சென்றிருப்பவன் எப்போது விடுதலையென்று காத்துக்கொண்டிருப்பதுமுண்டு.

கூண்டிலிருந்து பறவைக்கு விடுதலை.

நுகத்தடியிலிருந்து காளைக்கு விடுதலை.

உடலிலிருந்து உயிருக்கு விடுதலை.

கசாப்புக் கடைக்காரனின் கையிலே இருக்கும் கத்தியின் முனையிலே எத்தனையோ உயிர்களுக்கு விடுதலை.

செயல் திறமுடையவன் சிந்தனையிலிருந்து நல்ல எண்ணங்கள் விடுதலையானால நாட்டிற்கு நன்மை.

செயல் திறமற்றவன்—வெட்டிப் பேச்சுக்காரனின் இதயத்திலிருந்து விடுதலையாகும் எண்ணங்களால் யாருக்கு நன்மை?

'விடுதலை' என்பதற்கு வெவ்வேறு கோணத்தில் பல பொருள்கள் கொள்ளமுடியுமெனினும், "விடுதலை"—என்றவுடன் பெரும்பாலோர் 'நாட்டு விடுதலை'யைப்பற்றியே நினைப்பர்.

விடுதலை யாருக்கு வேண்டும்?

அடிமையாய்க் கிடப்பவர்க்கென்பதை அனைவரும் அறிவர்; ஒப்புவர்; 'அகில இந்தியாக்க'ளைத் தவிர!

சிதம்பரமும், சிவாவும், குமரனும், பாரதியும் வெள்ளையனை நோக்கிக் கேட்ட விடுதலை வடக்கிற்கு மட்டும்தானா? — என்றால், இன்றளவும் வசை பாடுவதைத்தவிர — குறுகிய நோக்கமென்று குதிப்பதைத்தவிர தக்க விடை சொல்வாரில்லை.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்," "பறையருக்குமிங்கு தீய புலையருக்கும் விடுதலை" என்றெல்லாம் அன்று பாரதியார் முழக்கமிட்டாரே ...அவரது ஆவல் — நினைவு நிறைவேற்றப்பட்டதா, தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்றனரா?—என்றால் வெறுப்போடும், வேதனையோடும், வெடித்த உள்ளத்திலிருந்து வெளிப்படும் தடித்த வார்த்தைகளால் தாக்க முனைகிறார்களேயன்றித் தக்க விடை சொல்வாரில்லை.

விடுதலை—இந்தச் சொல் அடிமைகளுக்குத் தேன். ஆதிக்கவாதிகளுக்குத் தேள்.

விடுதலையின் பெருமைதனை அறியாத மக்களுக்கு விடுதலை இருந்தாலும் ஒன்றுதான், இல்லையென்றாலும் ஒன்றுதான்.

விடுதலையுணர்வு வீரர்களிடம்தான இருக்கும்; இருக்கவேண்டும்; கோழைகளிடம் இருக்காது; இருந்தாலும் பயனில்லை.

விடுதலையைப் பெறுவதற்கு 'விலை' என்ன? இதுதான் என்றில்லை; இவ்வளவுதான் என்றில்லை. எதுவாகவும இருக்கும்; எவ்வளவாகவும் இருக்கும்.

எந்த ஏகாதிபத்தியத்திடமிருந்தாலும், விடுதலை கேட்பவர்கள் ஏளனம், ஏமாற்றம், வஞ்சகம், வன்முறை, அடுத்திருந்து கெடுத்தல் ஆகிய அத்தனை நிலைகளையும் தாங்கிக்கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும்; பொருட்படுத்தாமலாவது இருக்கவேண்டும். தியாகத்திற்குத் தயாராயிருக்கவேண்டும் — இவைகளெல்லாம் விடுதலை வீரருக்குரிய இலக்கணங்கள் மட்டுமல்ல; நியதியுமாகும்.

அதிகாரத்திற்கு, ஆணவத்திற்கு, அநியாயத்திற்கு, பலாத்காரத்திற்கு, மிரட்டலுக்கு ஒடுங்கக்கூடியதா விடுதலையுணர்வு?

நற்பண்பிலான் நாதுராம் கோட்சேயினாலும், விவேகமறியாத வில்லியம் பூத்தினாலும்; அண்ணல் காந்தி, ஆப்ரகாம்லிங்கன் ஆகியவர்களின் உயிருக்கு விடுதலை தரமுடிந்ததே தவிர, அவர்கள் பதித்துவிட்டுச் சென்ற கருத்துக்களுக்கு நல்லவர்களின் உள்ளத்திலிருந்து விடுதலையைத் தரமுடியவில்லை. தரவும் முடியாது.

விடுதலையுணர்வினை அடக்க முடியுமா, அல்லது தடுக்கத்தான் முடியுமா? முடியும், தகிக்கின்ற ஞாயிறைத் தண்ணென்று மாற்ற முடியுமானால்!

எது விடுதலை?

நிபந்தனையின்றிப் பெறுவதே விடுதலை.

விடுதலையை எப்படிப் பெறவேண்டும் காந்தியடிகள் கூறுகிறார்: சுதந்திரத்தை அடைய அனுசரிக்கும் முறை, சமாதானத்தோடு கூடியதாகவும், நியாயமானதாகவும் இருக்கவேண்டும்.

[சத்தியசோதனை பக்கம் 508]

விடுதலையைப் பெறும் வழி அறவழியாய் இருக்கவேண்டும்.

விந்தையொன்றுண்டு. அஃதென்ன? வேங்கையிடம் மாட்டிக்கொண்ட மானும், ஓநாயிடம் அகப்பட்டுக்கொண்ட ஆடும், பாம்பின் வாயிலகப்பட்ட தேரையும், பறவையின் வாயில் சிக்கிய சிறுமீனும் விடுதலைக்காகப் போராடித் துடிக்கின்றபோது, பகுத்தறிவினைப் பெற்ற மனித இனத்தில் பலர், விடுதலையைப்பற்றி—ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதுபற்றிச் சிந்தையிலும் கொள்ளாததுதான் விந்தை! விந்தை!!

ஜார் மன்னனிடமிருந்து இரசிய மக்களுக்கு விடுதலை. ஜார்ஜ் மன்னரிடமிருந்து அமெரிக்க மக்களுக்கு விடுதலை. அமெரிக்கக் கனவான்களிடமிருந்து நீக்ரோக்களுக்கு விடுதலை. பாகிஸ்தானும் விடுதலை. பர்மாவும் விடுதலை. இலங்கையும் விடுதலை. இலண்டனிடமிருந்து தில்லிக்கும் விடுதலை. தில்லியிடமிருந்து திராவிடத்திற்கு எப்போது விடுதலை?

திருவிடத்து மக்களெல்லாம் ஒரு மனத்தினராய் திரளுகின்றோமே.... அப்போது!

விடுதலையே! ஆவலோடும், நேர்மையோடும் அழைக்கின்றோம், ஓடிவா! எங்கோ தொலைதூரத்தில் திரிந்துகொண்டிராதே! வா! மகிழ்வூட்டவா! வரவேற்புக் கூறுகின்றோம், வேகமாய் விரைந்து வா! எங்களை அணைத்துக்கொள்ளவா! வையகத்தில் மூத்தவர்கள் நாங்கள்; வாடிக்கிடக்கின்றோமின்று! ஆண்ட எம்மினத்தின் மாண்ட புகழினை மீண்டும் கண்டிடத் துடிக்கின்றோம். உனக்கான விலை உடைமையென்றாலும் சரி, உயிரேயென்றாலும் சரி, எதையும் இழக்க இதயத்தில் உறுதி பூண்டுவிட்ட இலட்சோப இலட்சம் பேர் அழைக்கின்றோம்; விரைந்துவா!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

பாடு செய்தனர். மணியனோடு வாழ்க்கைப்பட அல்ல—ஒரு மடையனோடு வாழ்க்கைப்பட; எனக்குப் பொறுக்கமுடியவில்லை "யாரந்த மடையன்?" எனக் கேட்டேன் நான்—பாலன்.

"யாரோ பாலனும். இந்த ஊரிலிருந்து பட்டணத்துக்குச் சென்று பி. ஏ. படிக்கிறாராம். பள்ளிப்பாடங்களைப் படித்தால் மட்டும் போதுமா? உலகியல் தெரியவேண்டாமா? பெண்ணின் சம்மதம் அறியாமல் மணத்திற்கு ஒப்புக்கொண்டாராம். என் பெற்றோர் என்னை வலிய மணம் செய்ய இங்கு கொணர்ந்தனர். நானும் மாப்பிள்ளையைக் கண்டு செய்தியை சொல்ல முற்பட்டேன். முடியவில்லை — நாளை மறுநாள் மணவிழா. இருட்டறையிலுள்ள பிணத்தைத் தழுவுவதைவிட நானே பிணமாகப் புறப்பட்டேன். அந்த நல்ல காரியத்தைக் கெடுத்துவிட்டீர்களே — எனக் கூறிவிட்டு அழுதாள்.

சோகக் கதை. உண்மையில் நான் ஒரு முட்டாள்தான். மணப்பெண்ணின் சம்மதம் அறியாமல் கொலைக்குக் காரணமாக இருந்தேனே என்று எண்ணிப் பார்த்தேன். துக்கம் தொண்டையை அடைத்தது. ஆயினும் காட்டிக் கொள்ளவில்லை. அவள் காதலனின் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டேன். அவளுக்கு உதவி செய்வதாக உறுதி கொடுத்தேன். நான் யார் என்பதை மட்டும் சொல்லிவிடவில்லை. சிறிய படிப்பு, பெரிய அறிவுள்ளவள் அவள். பெரிய படிப்பு—சிறுமதியுள்ளவன் நான்!

அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டே ஊருக்குள் அழைத்து வந்துவிட்டேன். ஊருக்குள் வந்ததும் அவள் தனியே, நான் தனியே எங்கள் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டோம்.

இரவெல்லாம் தூக்கம் வரவில்லை; புரண்டு புரண்டு படுத்தேன். என் மனம் பலவித எண்ணங்களிடையே தவித்தது. இறுதியாக ஒரு உறுதியோடு அயர்ந்தேன். கண்ணயர்ந்தேன்.

இன்று மணவிழா மணமேடையெல்லாம் அலங்கரிக்கப்பட்டு விட்டது. மணவிழா என்றால் கேட்க வேண்டுமா! எல்லாவித ஏற்பாடுகளும் அமர்க்களமாயிருந்தது. பெண்ணையும் அலங்கரித்தார்கள். என்னையும் அலங்கரித்தார்கள். ஆனால், இருவரின் உள்ளங்கள் மட்டும் கொந்தளித்தன. ஒப்பந்த நேரம் நெருங்கியது. புரோகிதர் வராத விழா. நல்லதொரு தமிழறிஞர் தலைவர் பதவி ஏற்றார். மணப்பெண்ணும் நானும் மணவறையில் அமர்ந்தோம். அவள் — புனிதாவைப் பார்த்தேன். அவள் குனிந்தவாறு அழுதுகொண்டிருந்தாள். என் மனம் அலைமோதியது. என் கண்கள் சுற்றி வட்டமிட்டன. என் கழுத்திலிருந்த மாலை என்னைப் பார்த்துக் கேலிசெய்வது போன்று தோன்றியது. தலைவர் பேசி முடித்தார். தாலி கட்டும் நேரமல்ல — கணையாழி மாற்றும் நேரம் வந்தது. அவள் உடல் நடுங்கியது சோகத்தால் — என் உள்ளம் பதறியது. என்ன செய்வது? நடுக்கத்துடன் என் கணையாழியை அவள் கைகளில் மாட்ட முயன்றபோது "நிறுத்துங்கள்" என்ற குரல் கேட்டது. நான் அதிர்ச்சி கலந்த மகிழ்வோடு நிறுத்தினேன். அனைவரின் கண்களும் கருத்தும் குரல் வந்த திக்கை நோக்கின. பாதுகாவலர் தலைவர் ஒருவர் நாலைந்து பாதுகாவலர்களுடனும ஒரு இளைஞனுடனும் வந்துநின்றனர். புனிதா இளைஞனைக் கண்டாள்— இளைஞன் —அவனதான் மணியன்—புனிதாவைக் கண்டான். கண்ணும் கண்ணும் கலந்தது—பாதுகாவலர் தலைவர் கடந்த காலத்தின், மணி—புனிகா காதல் நிகழ்ச்சிகளைச் சொல்லிச் சட்டப்படி என் மணவிழா குற்றமென எடுத்துக் காட்டினார். அனைவருமே சோர்ந்தனர்—மூன்றுள்ளத்தைத் தவிர. நான் மெதுவாகத் தூபம போட்டேன். செய்த செலவு வீணாகிவிடக்கூடாதென்றேன். என் தந்தை உணர்ந்தார். தமிழறிஞர் தலைமையில் பாதுகாவலர் முன்னிலையில் மணியன்—புனிதா மணவிழா சீரும் சிறப்புமுற நிறைவேறியது. நான் அகமிக மகிழ்ந்தேன்.

இரவு நேரம் சுமார் மணி 11 இருக்கும். படுக்கையிலிருந்த நான் தாகந் தணிக்கச் சமையற் கட்டிற்குப் புறப்பட்டேன். வழியில் ஒரு அறையில் பேச்சுக் குரல் கேட்டது. உற்றுக் கேட்டேன்.

"நீங்கள் கொஞ்சம் தாமதித்திருந்தாலும் என் வாழ்வு நாசமாகியிருக்கும். மணமகனும் மணமகன். கடைசியில் பார்த்தால் என்னைக் காப்பாற்றுவதாகச் சொன்ன பாலன்தான் மணமகன். என்னைத் தந்திரமாக மணம் செய்துகொள்ள எண்ணிய அந்த மடையனுக்கு நல்ல பாடம் கற்றுக்கொடுத்தீர்கள்" என்றாள்—அவள்தான் புனிதா.

"அப்படிச் சொல்லாதே புனிதா. உன் நிகழ்ச்சிகள் யாவையும் அவர் மூலமே அறிந்தேன். உன்னைக் காப்பாற்றும் பொருட்டு அவரே நேரில் என்னிடம் வந்து செய்தியைக்கூறி என்னுடன் சென்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இந்த ஏற்பாடு செய்தார். நம் வாழ்வின் வழிகாட்டி அவர்" என்று புகழ்ந்தார் மணியன்.

"அப்படியா? மகா உத்தமர் அவர். ஒவ்வொரு பெண்ணுக்கும் இம்மாதிரி அண்ணா கிடைக்கவேண்டும். நான் என்ன புண்ணியம் செய்தேனோ அவரைஅண்ணனாகப் பெற! புனிதா வாழ்த்தினாள்.

என் உள்ளம் மகிழ்ந்தது. உள்ளே விளக்கும் அணைந்தது. நான் அதற்குமேல் அங்கு நிற்கலாமா? மணம் பெற்ற மணவிழா! வாழ்க மணமக்கள்! நீவிரும் வாழ்த்துவீர்!

★

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

வில்லிவாக்கம்

கட்டிட வளர்ச்சி நிதிச் சிறப்புக் கூட்டம்

10—6—62 ஞாயிறு காலை 10 மணிக்கு

சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளி வில்லிவாக்கம்.

தலைவர்: கருணாகரன்.

பேசுவோர்:

கே. ஆர். இராமசாமி

எஸ். எஸ். இராசேந்திரன் M. L. A.

என். வி. நடராசன்

டி. எம். பார்த்தசாரதி

கே. ஏ. கிருட்டினசாமி M. A. B. L.

டி. கே. பொன்னுவேலு B. A.

கட்டணம்: 50 பு. காசு 25 பு. காசு

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

‘தலைமை அமைச்சர்!’

[துரை]

தலைமை அமைச்சர் பதவி, தற்போது மிகப் பெரிய பதவியாக இருக்கிறது. பிரதம மந்திரியாக இருப்பவருக்கு, எவருக்குமில்லாத ‘மவுசு’ ஏற்படுகிறது. ‘எல்லாமே’ அவராகத்தான் இருக்கிறார். உலகத்தில் அப்பதவியைப் பெற, ஒரு பெரிய போட்டியே நடைபெறுகிறது. போட்டியென்ன, ஒரு போராட்டமே நடப்பதாகவும் கூறலாம். ‘போரில்’ வென்றவர் உயிருடன் நடமாட, அவசியம் ஒரு பட்டாளம் தேவைப்படுகிறது. கொலைசெய்யச் சதிகள் நடக்கின்றன. கூடுமானால் சர்வாதிகாரமே ‘திடீரென்று’ குதித்து விடுகிறது. தலைமையமைச்சர் பதவியில் அப்படியென்ன ‘அற்புதங்கள்’ நிறைந்திருக்கக்கூடும்? ‘தெரிந்தவர்களுக்கே’ அதன் உட்பொருள் விளங்கும்.

‘தலைமை அமைச்சர்’ தற்சமயம் எவ்வாறு நியமிக்கப்படுகிறார்? தேர்தல் முடிந்ததும், பெரும்பான்மை வந்த பார்லிமென்டின் கீழ்ச்சபை உறுப்பினர்கள் கூடித், தமக்கான கட்சித் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அக்கட்சியின் தலைவரை, ஜனாதிபதி நாட்டின் தலைமையமைச்சராக நியமிக்கிறார்.

பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கும் இந்தச் சனநாயக முறை, ஆதிகாலத்திலிருந்தே இருந்திருக்க முடியாது. அரசியல் உலகில் மலர்ந்த படிப்படியான வளர்ச்சியில்தான், இம்முறையும் நடைமுறைக்கு வந்திருக்கவேண்டும். அப்படியானால் நல்லதிற்கும் கெட்டதிற்கும் பிரபலமாகிய ‘தலைமை அமைச்சர் பதவி’ எப்போது முதன் முதலாக உண்டாக்கப்பெற்றது? திரு. ஜியார்ஜ் லீவீஸ் என்பவரின் காலத்திற்குப் போய்த்தான் இந்த விவரத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். முதலாம் ஜியார்ஜ் என்பவரும் இவரேயாகும்.

பிரிட்டனை ஆண்ட அரசர்களில், ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முதலாம் ஜியார்ஜ் என்பவரும் ஒருவராகும். 1714-ஆம் ஆண்டில் ஆன் அரசி இறந்ததும், அவ்வமயம் அரசியலில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்த ‘விக் குழுவினர்’ யோசித்துக் காலத்தைப் பாழடிக்காமல், ஹானோவர் எலெக்டரை முதல் ஜியார்ஜ் மன்னரென்று விளம்பரப்படுத்தி, மகிழ்ச்சிகொண்டனர். விக் அன்பர்கள் பிரிட்டனின் மன்னராக்கிவிட்ட இவருக்கோ, ஆங்கில மொழியே தெரியாது; தமிழ்நாட்டின் ‘கவர்னர்’ருக்கு, தமிழ்மொழி தெரியாதிருப்பதைப்போன்ற கதைதான் இது. ‘ஒரு ஜெர்மனி’க்காரருக்கு ஆங்கில மொழி தெரிந்திருக்க நியாயமில்லைதான். இங்கிலாந்தை இவருக்கு முன்னாலாண்ட வேந்தர்களுக்கிருந்த ஏகபோக உரிமைகள், முதலாம் ஜியார்ஜின் காலத்தில் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டுவிட்டதென்றே கூறவேண்டும். அதேபோல் பிரிட்டனின் ஆட்சிக்கயிறானது, அரசியலில் செல்வாக்குப் பெற்ற ஒரு குழுவினரின் கைக்கு, முதன் முதலாகச் சிக்கியதும் இவருடைய காலத்தில்தான். திறமைமிக்க ஒரு அமைச்சர்களைக் கையில் வைத்துக்கொண்டு, புத்திசாலித்தனமாகச் செயலாற்றி, ஐரோப்பாவில் ஒரு முக்கிய மன்னர் என்ற பட்டத்தை நட்டிக்கொண்டுவிட்டார் ஜியார்ஜ் அரசர்.

முதல் ஜியார்ஜுக்கு மன்னர் நாற்காலியைப் பிடித்துக் கொடுத்தவர்கள் யார்? ராச தந்திரிகளான விக் அன்பர்களேயாகும். ஜியார்ஜ் அந்த நன்றியை மறக்காமல், விக்குகளுக்கே அமைச்சர் பதவிகளைத் தந்து, புகழ் பெற்றார். அதேபோல்தான இப்போதும். அப்படியில்லாவிட்டால் மன்னர் பதவியும் அந்த மந்திரிப் பதவிகளும், அற்ப ஆயுளில் உயிரை விட்டுவிடுமே!

ஜியார்ஜ் அரசனுக்கு முன்பிருந்த மன்னர்களின் காலத்தில், அமைச்சரவையின் நிலவரம் என்ன? மந்திரிகளை நியமிப்பதும், அவ்வாறு நியமித்த அமைச்சர்களை உடனே விலக்கிவிடுவதும், அரசனுக்கு விளையாட்டாக இருந்திருக்கிறது. அமைச்சர்களின் கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பவர், நாட்டின் மன்னரேயாகும். ஜியார்ஜ் அரசனுக்கு இந்த ‘மாமூல்’படி நடப்பதற்கு முடியாமல், ஒரு சங்கடம் வந்து குறுக்கிட்டுக்கொண்டது. அவருக்கேற்பட்டுவிட்ட சங்கடத்தில், எவ்வளவு பெரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொன்னான திருப்பம், சரித்திரத்தில் ஏற்பட்டிருக்கிறது.

அரசன் ஜியார்ஜுக்கு ஆங்கில மொழி தெரியாது. உண்மை நிலை இவ்வாறிருக்க, அவரால் எப்படி அமைச்சர்களின் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கமுடியும்? எவ்விதமாக மந்திரிகளின் கூட்டத்தில், ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்த இயலும்? ஆகவே, மந்திரிகளுக்கும் மதிப்பிற்குரிய மன்னருக்கும் இடையில், அவசியம் ‘ஒரு ஆள்’ தேவைப்பட்டார். மந்திரிகளில் ஒருவரே அந்த ‘ஒரு ஆள்’ ஆனார். மன்னருக்கும் அமைச்சர்களுக்கும் இடையில், விஷயங்களைத் தூக்கிக்கொண்டு ‘அந்த அமைச்சர்’ அலையலானார். பிறகு அவரே மந்திரிகளின் கூட்டத்திற்கு, தலைமை வகித்து நடத்தலானார். நாளடைவில், அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் தொடர்பாக நின்ற அந்த அமைச்சருக்கு, ஒரு தனிப் பெரும் செல்வாக்குத் திடீரென்று பிறந்து, அதிவேகமாக வளரலாயிற்று.

முதல் ஜியார்ஜ் 1727 ஆம் வருடம் இறந்துபோனாலும், தலைமையமைச்சர் பொறுப்பில் அமைச்சரவையை ஒப்படைக்கும் இக்காலத்திய வழக்கத்திற்கு, அவ்வரசரின் காலத்தில்தான் அடிகோலப்பட்டிருக்கிறதென்று, மேற்கூறியவற்றிலிருந்து, புரிந்துகொள்ளலாம்.

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, “திராவிட நாடு” அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.